# வெண்ணெய் திருடன்

(பக்தியின் இயற்கை வடிவம்)

மூலம்
BUTTER THIEF

ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

மூன்றாம் பதிப்பு
Version: 3.5
November 3, 2022

கௌடிய ஸ்ரீ கௌரங்கா ராதா மதன் மோகன் ஆலயம்

(கன்னியாகுமரி)

ஜாதியில்லை,  நிறமில்லை,  மதமில்லை.
ஒரே இறைவன்,  ஒரே மந்திரம்

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே  ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

இந்தப் புத்தகத்தை தமிழில் வெளியிட பல பக்தர்களும் பக்தைகளும் மிகவும் துணை செய்துள்ளனர். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.

ஆசிரியர்
ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

மொழி பெயர்ப்பு
பகவதி காந்த தாஸா

சரிபார்த்தல்
ராதிகா தேவி தாஸி
கிருஷ்ண பிரியா தாஸி
அஜய் கிருஷ்ண தாஸா

வெளியீடு
Gokul Publications
கோகுல் பவன்
Opp. To: மாருதி ஸ்டோர்ஸ்
கொட்டாரம் - 629703
கன்னியாகுமரி, தமிழ் நாடு, இந்தியா

தொடர்பு
bkdasa@gmail.com

gokulbhajan.com
gokulbhavan.com
youtube.com/c/bkdasa
purebhakti.com

**Phone**
+91 750 222 2794
+91 960 066 8797
+91 959 796 9492
+1 919 491 9536

# முகவுரை

வேத சாஸ்திரங்களின் படி, பரம இறைவனான ஸ்ரீகிருஷ்ணர் பிரம்மாவின் நாளில் ஒரே ஒரு தடவை மட்டுமே பூவுலகுக்கு வருகிறார். பிரம்மாவின் நாளோ நம் உலகக் கணக்குப் படி 432 கோடி வருடங்கள். இந்த 432 கோடி வருடங்களில் ஆயிரம் தடவை நான்கு யுகங்களான சத்திய யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் அனைத்தும் வந்து போய் விடும்,

இப்படி, தன் சுயமான முழு சொரூபத்தில், கிருஷ்ண பகவானாக, சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் துவாபர யுகத்தில் கோகுலத்தில் அவர் தோன்றினார். அப்போது அவர் நிகழ்த்திய அற்புத லீலைகளை வேறு எந்த தேவர்களாலும் நிகழ்த்த இயலாது.

ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வுலகில் பற்பல லீலைகளை நிகழ்த்தியிருந்தாலும் குறிப்பாக அவர் கோகுலத்தில் நடத்தியவை மிகவும் சிறப்பானவை. அவரது மகத்தான லீலைகளால் தன் பக்தர்களையும் பக்தைகளையும் ஆனந்தக் கடலில் மூழ்க வைத்தார். கிருஷ்ண பக்தியை விட சிறந்தது வேறெதுவுமில்லை என்று வேத நூல்கள் கூறுகின்றன.

“கிருஷ்ண தாஸ அபிமானே ஏ ஆனந்த சிந்து
கோடிப் பிரம்ம சுக நஹே தார ஏக பிந்து”
(ஸ்ரீ சைதன்ய சரிதாமிர்தம்)

ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரேம பக்தி கொண்டு கிருஷ்ணருக்கே முழுவதும் தொண்டு செய்யும் ஒரு பக்தனின் ஆனந்தம் எவ்வளவு மேலானதாம்? அவன் மூழ்கித் திளைக்கும் அந்த ஆனந்த சமுத்திரத்தின் ஒரே ஒரு சிறு துளியுடன், மகாமகா ரிஷிகள் வருந்தித் தவமிருந்து பெறும் பிரம்மானந்தத்தைக் கோடி

மடங்கு பெருக்கினால் கூட ஒப்பிட முடியாதாம்! அவ்வளவு மகத்தானது கிருஷ்ண பக்தி!

ஆனால் உண்மையான கிருஷ்ண பக்தி அவ்வளவு எளிதாகக் கிடைப்பதில்லை. எத்தனையோ இலட்சக் கணக்கான பிறவிகளில் பெரும் புண்ணியங்கள் செய்திருந்தாலோ, அல்லது ஸ்ரீகிருஷ்ணரின் சுத்த பக்தர்களின் சேர்க்கை கிடைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

மேலும், கிருஷ்ண பிரேம பக்தர்களிடமிருந்து ஸ்ரீ கிருஷ்ணனின் அற்புத லீலைகளைக் கேட்கும் போது, கிருஷ்ண பக்தியைப் பெற வாய்ப்புள்ளது. இந்தச் சிறு புத்தகம் எங்கள் குரு மகாராஜாவான ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா அவ்வப்போது வழங்கிய சொற்பொழிவிலிருந்து எடுத்த ஒரு சிறு பகுதியான “Butter Thief” என்ற புத்தகத்தைத் தழுவியது. இதை பக்த கோடிகள் படித்து பலன் பெறுவார்கள் என்று நம்பி, இதை எங்கள் குரு தேவரின் மலர் கரங்களில் சமர்ப்பிக்கிறோம்.

நன்றி.

1 நவம்பர், 2022 பகவதி காந்த தாஸா
கோபாஷ்டமி சியாமலி தேவி தாஸி

## பொருளடக்கம்

முகவுரை....................................................................3

அத்தியாயம் ஒன்று.......................................................7
ஸ்ரீ கிருஷ்ணரின் அற்புத லீலைகளைக் கேட்போம்................7
பக்தி யோகம்.............................................................8
இறைவனின் பூலோக வருகை.......................................10
எவரையும் ஈர்க்கும் ஸ்ரீ கிருஷ்ணர்.................................11
கிருஷ்ண லீலைகளைச் கேட்பதன் மகத்துவம்................12

அத்தியாயம் இரண்டு...................................................15
ஸ்ரீ கிருஷ்ணரின் குழந்தைப் பருவ லீலைகள்....................15
ஒரே பரம்பொருள் இரண்டாகத் தோன்றினார்.................16
பரம் பொருளான கிருஷ்ணன் வளருதல்..........................17
யசோதாவின் மனத்தில் எப்போதும் கிருஷ்ணன்..............18
பால மல்லர்கள்..........................................................20
அன்புடன் குற்றம் கூறுதல்............................................22
ஓடிய பசுங்கன்று.........................................................25
பரிசுத்த அன்பை மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்பார்..........27
தித்திக்கும் வாழைப் பழத்தோல்.....................................28
உறிப்பானையுடன் அந்தரத்தில் தொங்கினான்...............31
கையும் களவுமாக பிடிபட்டான்.......................................34

அத்தியாயம் மூன்று......................................................37
பிரேம பக்தியினால் மட்டுமே கட்டுப் படுபவன்..................37
யசோதாவின் பேரழகு.................................................37
யசோதாவின் பாட்டரங்கம்...........................................39
யசோதாவைத் தேடும் கிருஷ்ணன்................................40
கொதித்து அவசரமடைந்த பால்....................................43
குருதேவர் பக்தர்களைத் தொண்டில் ஈடுபடுத்துதல்.......44

யசோதா பால கிருஷ்ணனை வென்றாள்........................46
தொண்டனுக்கும் தொண்டன்.......................................48
அன்பின் பலம்.......................................................49
தயிர்ப் பானையை உடைத்தல்.....................................50
தன் பக்தர்களுக்கு வழங்குதல்...................................52
பரமனின் வளையலான ஒட்டம்....................................54
அன்பின் வேகம்.....................................................54
ஒரு அன்புத் தர்க்கம்..............................................56
கிருஷ்ணனை அன்பினால் கட்டுதல்............................58
சாதன பக்தி.........................................................60

அத்தியாயம் நான்கு.................................................61
பிரேமப் பெரு வெள்ளம்...........................................61
யசோதாவின் மனப் போராட்டம்..................................61
எதிர்க் கட்சி.........................................................62
விமோசனம் அளிக்கத் திட்டம்..................................64
பலமிக்க போதனைகள்.............................................66
நளக்குவேரனுக்கும் மணிக்கிரீவனுக்கும் மோட்சம்........69
யசோதாவின் அதிர்ச்சியும் பயமும்..............................71
கிருஷ்ணனை நந்தகோபாலர் மீட்டார்..........................72
மாட்டுத் தொழுவத்தில் போஜனம்...............................75
கிருஷ்ணனை யசோதாவிடம் சேர்த்தல்.......................76

அத்தியாயம் ஐந்து..................................................83
பேர் மகிமை பெற்ற பழக்காரி...................................83
நந்த குமாரனிடம் கவர்ச்சி.......................................83
ஓ கிருஷ்ண்ா ஓ கிருஷ்ண்ா......................................84
பழக்காரியின் சபதம்...............................................85
கூடை முழுவதும் மாணிக்கங்கள் வைடூரியங்கள்...........89
முழு இதயத்தால் கனிந்து பாடு...................................91

# அத்தியாயம் ஒன்று

# ஸ்ரீ கிருஷ்ணரின் அற்புத லீலைகளைக் கேட்போம்

வேத காலத்து இந்தியாவில் மிகவும் மகிமை பெற்ற முனிவர்களும் ஞானிகளும் வேத சாஸ்திரங்களைப் படைத்தனர். அவர்களது ஆன்மீக அறிவானது, ஆத்மா, பரமாத்மா இவற்றைப் பற்றி அளவு கடந்திருந்தது. இறைவன் எவ்வாறு அகம், புறம் அனைத்திலும் உள்ளான் என்பதை அவர்கள் மிகவும் நன்கு உணா;ந்திருந்தனர். மேலும், அவர்கள் இவ்வாறு ஆத்ம ஞானத்தில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தது மட்டுமன்றி, ஆத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பினால் நாம் இறைவனிடம் எவ்வாறு உறவு கொள்ளலாம் என்பதையும் கண்டு பிடித்திருந்தனர்.

நாம் நம் குறைகள் நிறைந்த புலன்களால் இறைவனை ஒரு போதும் அறிய இயலாது. நமது மூளையினால் எவ்வளவுதான் சிரமப்பட்டு முயற்சி செய்தாலும் நம்மால் இறைவனை அறிய முடியாது. பரம இறைவன் இந்தப் பூத புலன்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். ஆனால் அந்தப் பரம இறைவன் ஆத்ம ஞானத்தை நமக்குக் குரு பரம்பரை வழியாக போதித்தார். ஸ்ரீகிருஷ்ணர் அதை முதலில் பிரம்ம தேவருக்கு போதித்தார். பிரம்ம தேவர் அதை நாரத முனிக்கு போதித்தார். நாரத முனிவர் அதை வியாஸ தேவருக்கு போதித்தார். வியாஸ தேவர் அதை சுகதேவ கோஸ்வாமிக்கு போதித்தார். இவ்வாறு ஆத்ம ஞானமானது ஸ்ரீ கிருஷ்ணரிடமே தொடங்கி, இடையில் எங்கும் உடையாமல் சங்கிலித் தொடர்

போல் குரு பரம்பரையில் வந்துள்ளது. இப்படி, அந்த பரம் பொருளிடமிருந்தே ஆரம்பித்து பரம்பரையாக நம் குருவர்க்கத்தில் வந்து கொண்டிருக்கும் அந்த ஞானத்தை நாம் நன்றாக உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இறைவன் என்பவர் யார்? அவர் எப்படி இருப்பார்? அவரது குணங்கள் என்ன? அவரது கருணை என்ன? நமக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? நாம் எவ்வாறு அவரை அடைந்து, அவருக்கு நிரந்தரமாகச் சேவை செய்யலாம்? இவையெல்லாம் மிகவும் விவரமாக ஸ்ரீ மத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீமத் பாகவதம், அனைத்து வேதங்கள் மற்றும் அனைத்து சாஸ்திரங்களின் சாரமாகும். அதில் பன்னிரெண்டு காண்டங்கள் உள்ளன. குறிப்பாகப் பத்தாவது காண்டத்தில் மிக முக்கியமான உபதேசங்கள் வருகின்றன. படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் பத்தாவது காண்டத்தின் சாரத்தைப் பற்றியதே இந்தச் சிறு நூலின் நோக்கமாகும்.

இதைப் படிக்க உங்களுக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும். மேலும் பக்தியோகத்தைப் பின்பற்ற இது உங்களுக்கு மிகவும் உறுதுணையாகவும் இருக்கும்.

## பக்தி யோகம்

இறைவனைப் பற்றி அறியவும் அவரிடம் உறவு கொள்ளவும் பக்தியோகத்தைத் தவிர வேறு எந்த யோகங்களும் பயன் படாது. பக்தியென்றால் என்னவென்று அறிவதற்கு முன்னால், முதன் முதலில் அறிந்து கொள்ள வேண்டியது ஆன்மாவையும் பரமாத்மாவையும் பற்றியதே. ஸ்ரீகிருஷ்ணரே நிரந்தரமான, என்றென்றும் இருக்கும் ஒரே

பரம்பொருள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாம் அனைவரும் எண்ணிலடங்காத சிறு சிறு ஜீவாத்மாக்கள். ஒவ்வொரு தனித்தனி ஜீவாத்மாவும் ஸ்ரீ கிருஷ்ணரைப் போல் நிரந்தரமானவை. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் பரஸ்பர பக்தியினால் ஒன்றாகச் சேர முடியும். இதையே நாம் பக்தியோகம் என்றழைக்கிறோம்.

ஆனால் இந்தப் பிரேம பக்தியில் பற்பல படிநிலைகள் உள்ளன. முழுவதுமாக முக்தியடைந்த ஜீவாத்மாக்கள் வைகுந்த லோகத்தில் சென்று அங்கே நிரந்தரமாக வாழ்கின்றன. வைகுந்த லோகம் முழுக்கவும் ஆன்மீகமானது. அது எல்லா பூத பிரம்மாண்டங்களுக்கும் அப்பால் உள்ளது. அந்த வைகுந்த லோகத்தின் சிகரத்தில் கோலோக பிருந்தாவனம் உள்ளது. பிரேம பக்தியின் சிகரத்தை அடைந்த ஜீவாத்மாக்கள் மட்டுமே அங்கு ஸ்ரீகிருஷ்ணருக்குப் பரஸ்பர சேவை செய்து வாழ முடியும். அவர்களின் பிரேம பக்தி நிலைக்கு மேல் வேறு பக்தி நிலை கிடையாது.

இங்கே பூத உலகங்களில் கட்டுண்ட ஜீவாத்மாக்கள் மாயையில் சிக்கியுள்ளனர். அவர்கள் பரிசுத்தமாக இல்லாததால் மாயையில் உழன்று தவிக்கின்றனர் அவர்கள், தத்தம் உடம்பின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைத் தவிர வேறெதுவுமே தெரியாமல், உடம்பின் சுகமே பரம சுகம் என்று நம்புகின்றனர். மேலும் அவர்கள் முடிவற்ற பிறவி சாகரத்தில் சிக்கி, திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து எப்போதும் துன்பப்படுகின்றனர். இந்த ஜீவாத்மாக்கள் எவ்வாறு பரமானந்தத்தை அறிய முடியும்? பக்தி யோகத்தைப் பின்பற்றி முதல் நிலையிலிருந்து படிப்படியாக மேல் நிலைகளுக்குச் சென்று இறுதியில் இந்த மாயையிலிருந்து விடுபட வேண்டும். இவ்வாறு, முதலில் முழு நம்பிக்கை (சிரத்தை) தோன்றி, பின் நிஷ்டை (உறுதியான பிடிப்பு) தோன்றி, அதன் பின் ருசி (பக்தியில் திளைத்தல்)

தோன்றி, அதன் பின் ஆஸக்தி (ஆன்மீகப் பிடிப்பு) தோன்றி, அதன் பின் பிரேம ஆனந்த பூரிப்பு அல்லது பிரேம புளகாங்கிதம் தோன்றும். இப்படி ஒவ்வொரு நிலையாக மேன்மேலும் செல்வதே பக்தி மார்க்கம் காட்டும் பாதை.

## இறைவனின் பூலோக வருகை

பக்தி யோகத்தால் மட்டுமே உண்மையாக இறைவனை உணரவும் அடையவும் முடியும். மற்ற மார்க்கங்கள் பக்தி மார்க்கத்தை விட சிறந்தவை அல்ல. இறைவனை முழுமையாக உணரவோ அவரிடம் பரஸ்பர சம்பந்தம் கொள்ளவோ பக்தி யோகத்தைத் தவிர வேறெதுவும் உபயோகப் படுவதில்லை.

பரம இறைவன் அளவில்லாத கருணையுள்ளவர். பூத உலகங்களில் கட்டுண்டு அல்லல்படும் ஜீவன்களின் மேல் இரக்கப்பட்டு அவ்வப்போது பூத உலகங்களுக்கு வருகை செய்கிறார். அவரது இப்படிப்பட்ட அவதாரங்களுக்கு எண்ணிக்கையே கிடையாது. இருந்தாலும் சாஸ்திரங்கள் குறிப்பாக பத்து அவதாரங்களை விஷேசமாகக் குறிப்பிடுகின்றன. அவை யாவை?

1. மீனவதாரம (மத்ஸ்ய அவதாரம்)
2. ஆமை அவதாரம் (கூர்ம அவதாரம்)
3. பன்றி அவதாரம் ( வராஹ அவதாரம்)
4. அரை மனித அரை சிங்க அவதாரம் (நரஸிம்ஹ அவதாரம்)
5. குள்ள அவதாரம் (வாமன அவதாரம்)
6. தோற்கடிக்க முடியாத வீர அவதாரம் (பரசுராம அவதாரம்)
7. மிக மேன்மையான அரசனாக ஸ்ரீ ராம அவதாரம்
8. அனைத்து குருக்களின் உருவமாக பலதேவ

அவதாரம்
9. புத்த அவதாரம் (குறிப்பு : இது கௌதம புத்தர் அல்ல)
10. வெள்ளைக் குதிரையில் சவாரி செய்து கயவர்களை கலியுகத்தின் கடைசியில் அழிக்கும் கல்கி அவதாரம்

(குறிப்பு: உயர்வான வேத சாஸ்திரங்களில் ஸ்ரீகிருஷ்ணரைப் பத்தில் ஒரு அவதாரமாகக் குறிப்பிடப்படவில்லை. அவர் அவதாரி. விஷ்ணு புராணத்தில் கூறுவது போல் அவர் அவதாரமல்ல. ஸ்ரீகிருஷ்ணரே பரம இறைவன் என்று ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீபிரம்ம சம்கிதம், ஸ்ரீகீத கோவிந்தம் போன்ற அனைத்து நூல்களும் கூறுகின்றன.)

## எவரையும் ஈர்க்கும் ஸ்ரீ கிருஷ்ணர்

மேல் குறிப்பிட்ட பத்து அவதாரங்கள் மட்டுமின்றி எல்லா அவதாரங்களின் மூல காரணம் ஸ்ரீகிருஷ்ணரே. அவரே எல்லாக் கடவுள்களுக்கும் மேலான மூல இறைவன். மேலும் இவ்வாறு அவர் அவதாரங்களாக வருகை செய்வது மட்டுமின்றி, சில சமயங்களில் தன் சுய ரூபத்தில் வரும் போது அவரால் ஈர்க்கப்படாத ஆன்மாக்கள் கிடையவே கிடையாது. அவர் மனிதர்கள் மட்டும் அல்லாமல் அனைத்து மிருகங்கள், பறவைகள், செடி, கொடி மரங்கள் இப்படி அனைத்து ஜீவராசிகளையும் தன்பால் ஈர்க்கிறார்.

ஏன் இப்படி அனைத்து ஜீவராசிகளும் அவரால் ஈர்க்கப் படுகின்றன? அவர் உயிர் அல்லது ஜீவாத்மாவைப் கவர்கிறார். தேவர்களிலிருந்து ஆரம்பித்து. மனிதர்கள், மிருகங்கள், மீன்கள், முட்டைகள், மரங்கள், செடி, கொடிகள், நீர், தூசி இப்படி எல்லாமே அவரால் கவரப்படுகின்றன. ஜீவன்கள் எல்லாவிடங்களிலும் உள்ளன. நீங்கள் பக்தி

யோகத்தைக் கடைப்பிடிக்கும் போது இந்த உண்மைகள் உங்களுக்குத் தெரியும். பின் உங்கள் பக்தி நிலை மேன் மேலும் உயரும் போது இந்த உண்மைகள் மேலும் தெள்ளத் தெளிவாகத் தெரியும். பின் உங்கள் பக்தி நிலை மேன்மேலும் உயரும் போது உங்களுக்கு ஸ்ரீகிருஷ்ணரின் மேல் பிரேம பக்தியும் உண்டாகும்.

பொதுவாக மக்களுக்கு தத்துவ ஞானங்களையும் உண்மைகளையும் தனியாகக் கேட்பதற்கு விருப்பம் கிடையாது. எனவே நான் உங்களுக்குக் கிருஷ்ண பிரேம பக்தியையும், அதன் வெவ்வேறு நிலைகளையும் ஸ்ரீகிருஷ்ணர் நடத்திய அற்புதமான தித்திக்கும் லீலைகளைக் கதைகள் போல் கூறி உங்களுக்கு விளக்குகிறேன். குறிப்பாக ஸ்ரீமத் பாகவதத்தில் பத்தாவது காண்டத்தில் வரும் சில லீலைகளை விவரித்து இதை விளக்க விரும்புகிறேன். அதில் ஸ்ரீகிருஷ்ணர் எவ்வாறு பூத உலகங்களுக்கு வருகை செய்கிறார், அவர் எவ்வாறு சாதுக்களையும் தன் பக்தர்களையும் பாதுகாக்கிறார், எவ்வாறு கொடியவர்களையும் அரக்கர்களையும் வதம் செய்கிறார், மற்றும் அனைத்து லீலைகளையும் அவர் எவ்வளவு உன்னதமாக நிகழ்த்துகிறார் என்பவை பற்றி அதில் அழகாக விவரிக்கப் பட்டுள்ளன.

## கிருஷ்ண லீலைகளைச் கேட்பதன் மகத்துவம்

ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், அவரது லீலைகள் இவையெல்லாம் இந்தப் பூத உலகத்தைச் சார்ந்தவையல்ல. அவைகள் அவரது ஆன்மீக உலகத்தைச் சார்ந்தவை. நம் ஊனமுள்ள புலன்களுக்கு அவைகளைப் புரிந்து கொள்ளும் சக்தி கிடையாது. மற்றும் கிருஷ்ண லீலைகளைப் பற்றி

கேட்பதும் ஒரு சாதாரண விஷயமல்ல. அவை ஆன்மீக செயல்களாகும். அழியும் இந்தப் பூத உலகங்களுக்கும் என்றும் அழியாத ஆன்மீக உலகங்களுக்கும் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவு வித்தியாசங்கள் உள்ளன. நாம் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை உச்சரிக்கும் போதும், அவரது குணங்களையும் லீலைகளையும் கேட்டும் பாடியும் மகிமைப் படுத்தும் போதும் அவை அனைத்தும் புனித நாதங்களாக அவரது ஆன்மீக உலகத்தில் எதிரொலிக்கின்றன.

ஒருவனது இதயத்தில் வேண்டாத எண்ணங்களும் பூத உலக மற்றும் உடல் சம்பந்தமாக எண்ணங்களும் நிறைந்திருக்கலாம். அறிவின்மையால் அவன் முழுவதுமாகவே மறைக்கப் பட்டிருக்கலாம். ஆனால் அவன் இந்தப் புனிதமான ஆன்மீக ஒலிகளுக்குச் செவி சாய்த்தால் போதும். அவை அவனது இதயத்தினுள் ஆழமாகச் செல்லும். நாம் இந்த ஆன்மீக ஒலிகளை சாதாரண பூத உலக ஒலிகளுக்கு ஒப்பிட முடியாது. ஸ்ரீகிருஷ்ணரே சுயமாக இந்த மகத்துவமான ஆன்மீக ஒலிகளில் வருகிறார். எப்படி? சிரத்தையுடனும், சிறிதேனும் நம்பிக்கையுடனும் பக்தி செலுத்தும் பக்தனின் இதயத்தில் கிருஷ்ணரின் ஆன்மீக உலகம் தானாகவே வருகிறது.

இதை ஒரு பக்தன் உண்மையில் உணரும் போது அவனது இதயம் மிகவும் பரிசுத்தமாகிறது. அவனது நம்பிக்கையும் சிரத்தையும் இன்னமும் கெட்டியாகிறது. ஆன்மீகப் பக்தி அவன் இதயத்தில் பொங்கி அவன் ஒரு பக்தனாகிறான். அவன் இப்போது குரு தேவரை அணுகி தீட்சை பெற்று பக்தித் தொண்டில் ஈடு படுகிறான். தேவையற்ற பூதவுலக எண்ணங்களிலும் செயல்களிலுமிருந்து தன்னை விலக்கிக் கொள்வது மட்டுமின்றி, உலக ஆசைகளிலிருந்து அவன் விடு படுகிறான். எல்லாவிதமான கெட்ட எண்ணங்களும் மறைந்து,

உறுதியான வழிபாடும் (நிஷ்டை), பக்தி ரசமும் (ருசி) மற்றும் ஆன்மீக பிணைப்பும் (ஆஸக்தி) உண்டாகிறது.

அதன்பின் அவனது பக்தி மேலும் வளர்ந்து, ஆன்மீக பூரிப்பு என்ற நிலையை அடைகிறான். இன்னமும் பழுத்து அவன் கிருஷ்ணரிடம் முழு பிரேம பக்தியை அடைகிறான். பின்னர் ஒரு நாள் அவன் தன் பூத உடல், மனம், அகந்தை அனைத்தையுமே துறந்து விட்டு, ஒரு பூரண தூய ஆன்மாவாக மாறுகிறான். கடைசியாக அந்தப் பக்தன் இன்னொரு ஆன்மீக உடலில் புகுந்து, ஸ்ரீகிருஷ்ணருடன் நிரந்தரமாகப் பிரஜாவில் என்றென்றும் பேரானந்தத்தில் திளைத்து அவருடன் வாழ்கிறான்.

# அத்தியாயம் இரண்டு

## ஸ்ரீ கிருஷ்ணரின் குழந்தைப் பருவ லீலைகள்

வேத சாஸ்திரங்களிலும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ஒன்பது காண்டங்களிலும் பரம இறைவனின் அற்புத லீலைகளைப் பற்றி மிகவும் அழகாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திருவிளையாடல்களை மனிதர்களோ, மற்றும் எந்த தேவர்களோ நடத்த இயலாது. இந்த அற்புத லீலைகளிலிருந்து ஸ்ரீகிருஷ்ணரே அந்த ஒரே பரம் பொருள் என்பது மிகவும் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

மேலும், ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது காண்டத்தில் மிகவும் இரகசியமான லீலைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் கோலோகப் பிருந்தாவனமான பிரஜாவில் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. அங்கே, ஸ்ரீகிருஷ்ணரை அவரது பக்தர்கள் இறைவனாகக் காண்பதில்லை! மாறாக, அவரையும் தங்களைப் போல் - ஆனால் அனைவரையும் ஈர்க்கும் உன்னதமான - ஒரு மனிதராகத்தான் காண்கின்றனர். அப்போது மட்டுமே அவர்களால் ஸ்ரீகிருஷ்ணரிடம் மிகவும் நெருக்கமான அன்பும் பிரேமையும் கொள்ள முடிகிறது. இது அவரது பரம சக்தியான யோக மாயையின் ஒரு பெரிய அற்புதம்!

இந்தப் பிரஜ லீலைகளில், ஸ்ரீகிருஷ்ணர் தானாக ஒன்றுமே செய்ய இயலாத ஒரு பாலகனாகப் பிறந்து, பின்னர் வளர்ந்து இளமைப் பருவத்தை அடைகிறார். ஆனால் அவர் நம்மைப் போல் பூதவுலக இயற்கை விதிகளுக்குள் கட்டுப்பட்டவர் அல்ல. தனது அன்பான பக்தர்களையும் பக்தைகளையும்

மகிழ்விக்கவே அவர் இந்த அற்புத லீலைகளை நிகழ்த்துகிறார். அவரோ, என்றுமே மாறாத, அனைத்தும் அறிந்த அளவில்லா சக்தி வாய்ந்த பரம் பொருளே ஆவார். ஆனால் அவர் தனது லீலைகளைக் கச்சிதமாக நடத்துவதற்காக யோக மாயை என்ற தன் லீல சக்தியினால் தன்னை பரம இறைவன் என்று தெரிய விடாமல் மறைத்து விடுகிறார். அவ்வாறு தன்னை அவர் மறைத்து, தனது லீலைகளில் முழுவதுமாக மூழ்கி, தன் பிரியமான பக்தர்களிடமும் பக்தைகளிடமும் நெருங்கிய அன்பை பரஸ்பரமாகப் பரிமாறிக் கொள்கிறார்.

## ஒரே பரம்பொருள் இரண்டாகத் தோன்றினார்

ஸ்ரீகிருஷ்ணரும் ஸ்ரீபலதேவரும் ஒரே பரம இறைவனின் இரண்டு தோற்றங்களே. சிலர் கேட்கலாம்: “அது எப்படி இரண்டு பேர் ஒரே நேரம் ஒரே பரமனாக இருக்க முடியும்?” என்று. ஆனால் அவர் இரண்டு உருவங்களில் தோன்றினாலும், பலதேவரும் கிருஷ்ணரும் ஒன்றே என்ற உண்மையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீகிருஷ்ணர் பலதேவரின் உடலில் தோன்றியதன் காரணம் என்ன? நாம் எவ்வாறு ஸ்ரீகிருஷ்ணருக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதை நமக்குச் சொல்லித் தரவே அவர் அப்படி உருவெடுத்தார்.

அனைத்து குருத் தத்துவங்களின் மூலமும், அவற்றின் மொத்தமுமே பலதேவ பிரபுவாகும். அவர் நித்திய பரம உண்மைகளையும், தந்துவங்களையும் நமக்கு உபதேசித்து ஸ்ரீகிருஷ்ணரையும் அவரது ஆனந்த மய சொரூபமான ஸ்ரீமதி ராதா ராணியையும் எப்படி நாம் சேவை செய்து அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்க வேண்டும் என்று நமக்கு சொல்லித் தருகிறார்!

# பரம் பொருளான கிருஷ்ணன் வளருதல்

இப்போது பிரஜாவில் கிருஷ்ணரும், பலதேவரும் ஒன்று அல்லது இரண்டு வயதுப் பருவம் ஆகியிருந்தனர். மாயையில் கட்டுண்ட நம் போன்ற ஜீவன்கள் மட்டுமே குழந்தையாகப் பிறந்து, தவழ்ந்து, பின் வாலிபம் அடைந்து, அதன் பின் முழு மனிதனாக ஆகின்றன. பின்னர் வயதாகி கிழமாகி விடுகின்றன. ஆனால் பரம் பொருளான கிருஷ்ணரோ இப்படி இந்த நிலைகளை அடைவதில்லை. அவரது நிரந்தர சொரூபத்தில் அவர் ஒரு மிக அழகான இளம் வாலிபன். ஸ்ரீகிருஷ்ணர் இந்தப் பருவத்திலிருந்து எப்போதும் குறைவதோ கூடுவதோ இல்லை. ஆனால் அவர் இந்தப் பூதவுலகத்தில் லீலைகளுக்காக வந்து தோன்றும் போது, குழந்தைப் பருவத்திலிருந்து பற்பல வயது நிலைகளை எடுத்துக் கொண்டு தன் நெருங்கிய பக்தர்களிடம் அன்பையும் பாசத்தையும் பரிமாறிக் கொள்கிறார்.

இவ்வாறே, ஸ்ரீகிருஷ்ணரும், பலதேவ பிரபுவும் பரம இறைவனாக இருந்தாலும் அவர்கள் பிரஜாவில் அரையில் துணி மணிகள் கூட அணியாத சிறு குழந்தைகளாகத் தோன்றி, தத்தம் பிஞ்சுக் கை கால்களால் தவழ்ந்து இங்குமங்குமாகத் திரிந்தனர். ஸ்ரீகிருஷ்ணர் யசோதா தேவிக்கும், பல தேவர் ரோஹிணி தேவிக்கும் பிறந்தவர்கள்.

சில சமயங்களில் கிருஷ்ணனோ அல்லது பல தேவனோ ஏதாவது பாம்பைக் கண்டு அதைப் போய்ப் பிடித்துக் கொள்வார்கள். அதை அம்மா யசோதாவும் ரோஹிணியும் கண்டு மிகவும் பயந்து நடுங்குவார்கள்! சில சமயங்களில் இரண்டு குழந்தைகளும் தங்கள் கைகளைக் கொடும் காட்டு நாய்களின் வாய்களுக்குள் விடுவார்கள். ஆனால் அந்த நாய்களோ அவர்களது கைகளைக் கடிக்காமல் அமைதியாக அப்படியே அசையாமல் உட்கார்ந்து

கொண்டிருக்கும்.

அவர்கள் மிகவும் அழகான விதவிதமான விளையாட்டுகளைப் பயின்றனர். நாய் அல்லது பசுங்கன்றின் வாலை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வார்கள். அவை என்ன செய்யும்? இருவரையும் அன்புடன் இழுத்துச் செல்லும். சில சமயங்களில் கிருஷ்ணனும் பலதேவனும் பலம் பொருந்திய மூர்க்கமான காளைகளின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு அவற்றுடன் சண்டை போட்டு விளையாடுவார்கள். அந்தக் காளைகளும் அவர்களுடன் நன்றாக சண்டையிட்டு விளையாடும்.

## யசோதாவின் மனத்தில் எப்போதும் கிருஷ்ணன்

ஸ்ரீ கிருஷ்ணனும் பலதேவனும் சிறு குழந்தைகளாக இருந்த போது சில சமயங்களில் அவர்கள் வீட்டுக்கு வெளியேயுள்ள வெளிப்புற மதில் கதவைத் தாண்டி தவழ்ந்து செல்வார்கள். ஆனால் அங்கே வேறு யாரையாவது கண்டதும், பயந்து உடனே திரும்பித் தத்தம் தாயார்களிடம் வேகமாக ஓடி வருவார்கள்! அப்போது யசோதாவும் ரோகிணியும் தங்கள் மடியில் தவழ்ந்து வந்து உட்கார்ந்திருக்கும் பாலகர்களை எடுத்துக் கொண்டு என்ன செய்வார்கள்? கொஞ்சிக் கொண்டு முந்தானைகளால் அவர்களை மூடி உச்சி முகர்ந்து, தங்கள் கண்களில் கண்ணீர் ததும்ப, இளகிக் கனிந்து உருகும் நெஞ்சத்துடன் கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் பாலூட்டுவார்கள்.

சில வேளைகளில் கோபியர்கள் யசோதா தேவியின் வீட்டுக்கு வருவார்கள். ஆனால் அவர்கள் என்ன காண்பார்கள்? தாழியில் யசோதா தயிரைக் கடைந்து கொண்டும், மற்றும் கிருஷ்ணனுக்காக

வேண்டி பற்பல வகையான உணவு பதார்த்தங்களை செய்து கொண்டும் இருப்பாள். ஆனால் இவ்வாறு அத்தனை வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போதும் கிருஷ்ணனின் நினைவுகள் தான் அவளது நெஞ்சத்தில் எப்போதும் நிறைந்திருக்கும். இடைவிடாமல் பாடிக் கொண்டே இருப்பாள்.

*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*
*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*

கிருஷ்ணன் வீட்டின் உள்புறமும் முற்றத்திலும் தவழ்ந்து கொண்டிருப்பான். அவன் செல்லும் எல்லா இடங்களும் சுத்தமாகவும் சுகாதாரமுமாக இருக்க வேண்டி அவற்றைச் சுத்தம் செய்வாள். அப்போது அவள் என்ன பாடுவாள்?

*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*
*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*

சில சமயங்களில் அவர் உரலில் தானியங்களை இட்டு உலக்கையால் குத்திக் கொண்டும், மற்ற நேரங்களில் திரி கல்லில் தானியங்களை மாவாக அரைத்துக் கொண்டும் இருப்பாள். அப்போது அவள் என்ன பாடுவாள்?

*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*
*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*

சில சமயங்களில் யசோதா தன் வேலைக்காரர்களிடம் அன்றாட வேலையை ஒப்படைப்பாள். மற்ற சமயங்களில் கிளிகளுக்கு மாதுளம் பழ விதைகளை ஊட்டியவாறு அவற்றிடம் செல்லமாக, “இப்படிப் பாட வேண்டும்!” என்று கூறி பாடுவாள். என்ன பாடுவாள்?

*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*
*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*

இவ்வாறு கிருஷ்ணனை எப்போதும் தன் நெஞ்சத்தில் வைத்துக் கொண்டு உருகிப் பாடுவது யசோதா மட்டுமல்லாமல் பிருந்தாவனத்திலுள்ள ஒவ்வொரு கோபியும் தத்தம் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டே கிருஷ்ணனைத் தான் எப்போதும் நினைத்துப் பாடுவார்கள். கிருஷ்ணன் எப்போது தன் வீட்டில் வெண்ணெயைத் திருட வருவான் என்று ஏங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களது எண்ணம் முழுவதும், "இன்று கிருஷ்ணன் எப்படியும் என் வீட்டுக்கு வர வேண்டும். அவன் வெண்ணெயைத் திருடும் போது நான் தந்திரமாக அவனைக் கையும் களவுமாக பிடித்துக் கொள்ள வேண்டும்" என்று தான் சென்று கொண்டிருக்கும்.

கோபியர்கள் எல்லோரும் இப்படித்தான். தங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது கூட, கிருஷ்ணனைத் தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் கிருஷ்ணனைப் பார்க்க விடிந்தும் விடியாததுமாக காலையிலேயே யசோதாவின் வீட்டு முன் சென்று கூட்டம் போட்டு விடுவார்கள்! கிருஷ்ணனின் கொள்ளை அழகில் அவர்கள் மெய் மறந்து தங்கள் சொந்தக் குழந்தைகளையே கவனிக்க மறந்து விடுவார்கள். சொந்தக் குழந்தைகளை விட மிக அதிகமான அன்பை அவர்கள் கிருஷ்ணனிடம் தான் செலுத்தினர்: "ஓ! கிருஷ்ணன் எனக்குக் குழந்தையாக வர மாட்டானா? அப்படி வந்திருந்தால் நான் அவனுக்குப் பாலூட்டி என் பாசம் அத்தனையையும் கொட்டி அவனுக்கு என் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்திருப்பேனே!" என்று ஏங்கிக் கொள்வார்கள்.

## பால மல்லர்கள்

இவ்வாறு ஒவ்வொரு கோபியும் ஏங்கிக் கொள்வது அன்றாடம் நடக்கும் ஆச்சரியம். ஆனால்

அதை விடவும் ஆச்சரியம் என்னவென்றால் ஒவ்வொரு பசுவும் கூட இவ்வாறு ஏங்கிக் கொண்டிருப்பதே! பசுக்கள் அனைத்தும் நந்த கிராமத்தில் வந்து கிருஷ்ணனுக்காகவும் பலராமனுக்காகவும் வெளியேக் காத்துக் கிடக்கும்! அப்போது கிருஷ்ணனும் பலராமனும் வெளியே வந்து பசுக்களின் கீழேப் போய்ப் படுத்துக் கொள்வார்கள். ஆனந்தம் தாங்க முடியாமல் அந்த பசுக்களின் மடிகளிலிருந்து தானாக பால் அவர்களின் வாயினுள் பாய்ந்து கொண்டிருக்கும்! அவை, “ஓ, கிருஷ்ணன் எனக்குக் குழந்தையாக வர மாட்டானா? அப்படி வந்தால் நான் அவனுக்குப் பாலூட்டி என் பாசம் அனைத்தையும் கொட்டியிருப்பேனே” என்று ஏங்கித் தவிக்கும்! கோகுலம் எங்கிலும் இப்படி ஒரே பக்தி பரவசம் தான் பொங்கி வழிந்து கொண்டிருக்கும்!

கிருஷ்ணனும் பலதேவனும் இவ்வாறு வளர்ந்து, இப்போது அவர்களுக்குச் சுமார் ஒன்றரை வயது ஆகியிருக்கும். அவர்களால் இப்போது நிமிர்ந்து நிற்பது மட்டுமின்றி நடக்கவும் முடிந்தது. நடக்கும் போது சில சமயம் கீழேயும் விழுவார்கள். அவர்களைப் பார்க்க எப்போதும் கோபியர்கள் வருவார்கள். அவர்களுக்குள் இரண்டு கட்சிகள் வேறு! ஒன்று பலதேவனின் பக்கம், இன்னொன்று கிருஷ்ணனின் பக்கம்.

கிருஷ்ணனின் பக்கம் சார்ந்துள்ள கோபியர்கள், “எங்கள் கிருஷ்ணன் தான் பலராமனை விட பலசாலி. பலதேவனை எங்கள் கிருஷ்ணன் எளிதாக வென்று விடுவான்” என்று சவால் விடுவார்கள்.

உடனே பலதேவன் பக்கம் சார்ந்துள்ள கோபியர்கள், “நிச்சயமாக முடியாது. எங்கள் பலதேவன் தான் கிருஷ்ணனை விடவும் பலமானவன்” என்று பதில் சவால் விடுவார்கள். மேலும் கிருஷ்ணன் பக்கம் சார்ந்துள்ள கோபியர்கள்,

“கிருஷ்ணன் பலதேவனை வென்றால் நாங்கள் கிருஷ்ணனுக்கு ஒரு லட்டு கொடுப்போம்” என்பார்கள். உடனே மற்ற கோபியர்கள், “பலதேவன் ஜெயித்தால் நாங்கள் பலதேவனுக்கு ஒரு லட்டு கொடுப்போம்” என்று பதில் சவால் விடுவார்கள்.

பாலகிருஷ்ணனும் பலதேவனும் இதைப் புரிந்து கொண்டு, கோபியர்களின் ஆரவாரமான ஊக்கத்தினால் தாங்கள் ஒருவருக் கொருவர் உற்சாகத்துடன் மல் யுத்தம் செய்ய ஆரம்பிப்பார்கள். கிருஷ்ணனும் பலதேவனும் உடலில் ஆடை கூட அணிந்திருக்கவில்லை. எதிரெதிராக நின்று கொண்டு தங்கள் தொடைகளையும் மார்புகளையும் தேர்ச்சி பெற்ற மல் யுத்தர்கள் தட்டிக் கொள்வதைப் போல் தட்டிக் கொண்டு, ஒருவரையொருவர் பிடித்து மடக்கித் தரையில் கீழேப் போட முயல்வார்கள்.

ஆனால் இருவருமே சரி சமமான பலம் கொண்டிருந்ததால் சில சமயம் பலதேவன் கிருஷ்ணனைக் கிட்டத்தட்ட வென்றது போல் வரும் போது லபக்கென்று கிருஷ்ணன் பலதேவனை திருப்பிக் கவிழ்த்து விடுவான்! இது போல் கிருஷ்ணன் பலதேவனை வெல்ல முயலும் போது பலதேவன் சாதுரியமாக கிருஷ்ணனைக் கவிழ்த்து விடுவான்! இவ்வாறு இருவரும் மாறி மாறி மற்றவரை வெல்ல முயல்வார்கள். இதைக் கண்டு ரசித்துக் கொண்டிருக்கும் கோபியர்களும் மற்றும் கோகுல வாசிகளும் ஆரவாரத்துடன் கைக்கொட்டிச் சிரித்து மகிழ்வார்கள்.

## அன்புடன் குற்றம் கூறுதல்

இப்போது கிருஷ்ணன் இன்னமும் பெரியவனாக வளர்ந்திருந்தான். இடுப்பில் அழகான மணிகள் நிறைந்த தங்கச் சங்கிலியை

அணிந்திருப்பான். அது அவன் நடக்கும் போதெல்லாம் ஜல் ஜல்லென்று நாதம் எழுப்பும். அப்போது அவன் ஆச்சரியப்படுவான்: “இந்த சப்தம் எங்கேயிருந்து வருகிறது?.” புரியாமல் அங்குமிங்கும் பார்ப்பான். அந்தச் சப்தம் தன்னிடமிருந்து தான் வருகிறது என்பதை அறியாமல் விழிப்பான்.

கோபியர்கள் எப்போதும் போல் கிருஷ்ணனைப் பார்க்க வந்து கொண்டேயிருப்பார்கன். ஆனால் இப்போதெல்லாம் அவர்கள் யசோதாவைத் தான் அதிகமாகப் பார்க்க வந்தனர். ஏன்? கிருஷ்ணன் செய்யும் அட்டகாசங்களைப் பற்றி புகார் செய்யத்தான்! “ஏ யசோதா! உன் மகன் எங்கள் வீட்டிற்குள் புகுந்து, எங்கே மறைத்து வைத்திருந்தாலும் அத்தனை வெண்ணெய் பானைகளையும் கண்டுபிடித்து திருடித் தின்று விடுகிறான். அதுமட்டுமல்ல. அவன் தன்னுடன் சுதாமா, ஸ்ரீதாமா, சுபாலா, மதுமங்கலா - இப்படி எல்லோரையும் வேறு சேர்த்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் குரங்குகளைப் போல் எங்கும் புகுந்து திருடுகின்றனர்”. கிருஷ்ணனின் சக தோழர்கள் அனைவரும் நான்கு குமாரர்கள் போல் உடம்பில் ஆடையின்றி வெட்கமின்றி ஓடியாடும் சிறுவர்களே!

கோபியர்கள் அனைவரும் இவ்வாறு புகார் செய்யும் போது அவர்களிடம் ஏதாவது கோபம் இருக்குமா? சுத்தமாகக் கிடையாது! பதிலாக அவர்கள் யசோதாவின் மேல் பரிதாபப் படுவார்கள். எப்படி? “யசோதாவுக்கு எங்களைப் போல் அதிஷ்டம் இல்லை. கிருஷ்ணன் எங்கள் வீடுகளில் தயக்கமின்றி புகுந்து. தன் ஆசை தீர விளையாடி களவாடிச் செல்கிறான். ஆனால் தனது வீட்டில் அவன் இவ்வாறு லீலைகளையோ திருட்டையோ செய்யவில்லையே! மேலும் அவன் எங்கள் வீடுகளில் தன் மனம் மகிழ விளையாடுவது போல் யசோதாவின் வீட்டில் மகிழ்ச்சியாய் விளையாடவில்லையே! கிருஷ்ணன் செய்யும் எல்லா விதமான தித்திக்கும் லீலைகளையும்

யசோதா காணவில்லையே! பாவம் இந்த யசோதா! யசோதாவை விட நாங்கள் தான் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்!”

கோபியர்கள் அனைவரும் புகார் கூற வருவதாகத் தெரிந்தாலும் அவர்கள் உண்மையிலேயே புகார் செய்வது போல் 'நடிக்கத்தான்' செய்வார்கள். இவ்வாறு தங்களை முழுவதுமாக “கிருஷ்ண லீலை” யில் புகுத்தி ரசித்துப் பருகுகிறார்கள். உண்மையில் கிருஷ்ணன் எப்படியெல்லாம் தித்திக்கும் லீலைகளைப் புரிகிறான் என்பதையே அவர்கள் யசோதாவிடம் கூறினார்கள்.

அதுமட்டுமல்ல. சில நேரங்களில் கிருஷ்ணன் தன் சக தோழனிடம் சொல்லுவான்: “நீ உன் அம்மாவிடம் போய், ‘ஓ அம்மா நீ சீக்கிரம் இங்கே ஓடி வா. யாரோ நம் பசுங்கன்றுக் குட்டியை கட்டிலிருந்து அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அது ஓடிப் போய் தாய் பசுவின் பாலை எல்லாம் குடித்துக் கொண்டிருக்கிறது! அவ்வளவு பாலையும் அதுவே குடித்துப் பின் நமக்கு ஏதும் இருக்காது!’ என்று பொய் சொல்லி வெளியே வர வை. நாங்கள் அனைவரும் இங்கே வீட்டின் வெளிப்பக்கம் ஒழிந்து கொள்வோம்” என்று கூறுகிறான்.

அவனது சகா இப்படித் தன் தாயாரிடம் உரக்கக் கூறும் போது, அந்தக் கோபியும் அதை உண்மைதான் என்று நம்பி, செய்து கொண்டிருந்த வேலையையும் அப்படியே போட்டு விட்டு வீட்டை விட்டு வெளியே வேகமாக கன்றைத் துரத்த ஓடுவாள். இது தான் தருணம் என்று மறைந்து கொண்டிருக்கும் கிருஷ்ணனும் தன் சக தோழர்களும் வீட்டுக்குள் புகுந்து வெண்ணெய் மற்றும் அனைத்தையும் திருடிக் கொண்டு ஓடி விடுகின்றனர்!”

கோகுலத்தில் கிருஷ்ணன் புரிந்த திருவிளையாடல்களுக்கு எல்லையேயில்லை சில

சமயம் கோபியர்கள், “இன்று கிருஷ்ணன் என் வீட்டுக்கு வரட்டும். நான் கையும் களவுமாக அவனைப் பிடித்துக் கொள்கிறேன்” என்று நினைத்து வீட்டையும் திறந்து வைத்துக் கொண்டு ஒழித்திருந்து காத்துக் கிடப்பார்கள். அவர்கள் எதிர் பார்த்தது போல் கிருஷ்ணனும் மெதுவாக சத்தம் எதுவும் செய்யாமல் வீட்டினுள் நுழைவான். நேராகப் போய் வெண்ணெய்த் தாழியினுள் கையை விடுவான். ஒழிந்திருந்த கோபி உடனே ஓடி வந்து கிருஷ்ணனைக் கையும் களவுமாக பிடித்துக் கொண்டு, “ஓ கள்வன்! நீ ஏன் எங்கள் வீட்டில் வந்து திருடுகிறாய்?” என்று கேட்பாள்.

உடனே பதிலுக்கு கிருஷ்ணனோ, அப்பாவி போல் நடித்துக் கொண்டே, இனி இவளிடமிருந்து தப்ப முடியாது என்று நினைத்துக் கொண்டு, “ஓ அம்மா நான் உன்னை ‘என் அம்மா’ என்று நினைத்துக் கொண்டு, இது என் வீடுதான் என்று உள்ளே வந்து விட்டேன்! நீ என் அம்மா அல்ல என்று ஞாபகமில்லாமல் போய் விட்டது.” என்று களங்கமில்லாமல் கூறுவான். ‘அம்மா’ என்று தன்னை அழைத்ததால் அவளது இதயம் உருகி, ஆனந்தம் பீறிட, கண்ணீர் விட ஆரம்பிப்பாள். இதுதான் தருணமென்று கிருஷ்ணன் அவளது கைகளிலிருந்து தன்னை விடுவித்து விட்டு, குதித்து வெளியே ஓடி விடுவான்! அந்தக் கோபியோ தன்னை மறந்து அப்படியே நின்று கொண்டிருப்பாள். எவ்வளவு நேரம் இப்படி நிற்பாள் என்பது தெரியாது!

## ஓடிய பசுங்கன்று

யசோதாவிடம் கிருஷ்ணன் செய்யும் அட்டகாசங்களைக் கூற கோபியர்கள் ஒவ்வொரு நாளும் வருவார்கள். அவர்களுக்கு இது அன்றாட வழக்கமாகி விட்டது.

ஒரு நாள் ஒரு கோபி யசோதாவிடம் கூறிக் கொண்டிருந்தாள்: “அம்மா யசோதா! இன்று உன் மகன் என் வீட்டில் வெண்ணெயைத் திருடும் போது அவன் கைகள் பானையினுள் இருக்கும் போதே கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டேன்! நீ ஏன் இங்கு வந்து வெண்ணெயைத் திருடுகிறாய்? என்று கேட்டேன்...

“அதற்கு அவன், 'அம்மா! இல்லையில்லை.. நான் வெண்ணெயைத் திருடுவேனா? இன்று நான் என் பசுங்கன்றுகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேனா.. அது இங்கே வீட்டினுள் ஓடி வந்துவிட்டது. நான் அதைக் தேடிக் கொண்டு இங்கே வந்தேன். ஆனால் அந்தக் கன்றுக் குட்டியோ இந்த வெண்ணெய் பானையினுள் குதித்து விட்டது!' என்றான்...

“ஓகோ, உன் கன்றுக்குட்டி அதுவும் சரியாக இந்த வெண்ணெய் பானையினுள் குதித்து விட்டதா? என்று கேட்டேன்...

“அதற்கு உன் மகன், 'ஆமாம் அம்மா!' என்று களங்கமில்லாமல் பதில் கூறினான். அது மட்டுமல்ல. தன் சிறு பொம்மைக் கன்றுக் குட்டியை அந்தப் பானையினுள்ளிருந்து வெளியே எடுத்துக் காட்டியவாறு, ‘நீ நம்பமாட்டாயா? இதோ பார்!' என்றான். இதைக் கண்ட அவனது சக நண்பர்கள் அனைவரும் கைக்கொட்டிச் சிரித்தனர். நான் இந்தக் காட்சியைப் பார்த்து மெய் மறந்து நின்றிருந்தேன். உன் மகனும் அவனது சகாக்களும் நழுவி ஓடி விட்டனர்..”

யார் இந்த ஸ்ரீ கிருஷ்ணன்? எல்லாக் கடவுள்களுக்கும் மேலான பரமனல்லவோ? தன் பக்தர்களையும், பக்தைகளையும் தேனினுள் இனிய தன் லீலைகளால் மகிழ்விப்பதல்லவோ அவனது பரம விருப்பம்? ஸ்ரீ கிருஷ்ணனின் மற்ற அவதாரங்களால்

இவ்வளவு இனிமையான லீலைகளை வழங்க முடியாது! அனைத்து கடவுள்களும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை வழிபடுகின்றனர். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணன் யாரை வழிபடுகின்றான்? அவரது பரிசுத்தமான பக்தர்களையும் பக்தைகளையுமே! அவர்களது ஆசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்து வைப்பது மட்டுமே அவனுக்கு முக்கியம்! கோகுலத்திலுள்ள அனைத்து கோபியர்களும் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள்? “என் கிருஷ்ணன் எப்போது என் வீட்டில் வந்து வெண்ணெய் திருடுவான்?” என்றே தான் தினமும் ஏங்கிக் கொண்டிருந்தனர்!

## பரிசுத்த அன்பை மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்பார்

தனக்கு ஒருவன் பக்திப் பரவசத்துடன் அளிப்பவைகளை மட்டுமே ஸ்ரீகிருஷ்ணர் ஏற்றுக் கொள்கிறார். இதை அவர் ஹஸ்தினாபுரிக்கு ஒரு சமயம் சென்றிருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஒரு நாள் அவர் தனது மிகவும் நெருங்கிய தோழர்களான பாண்டவர்களைப் பார்க்கச் சென்றிருந்தார். அர்ஜீனனும் அவனது சகோதரர்களுமான மற்ற நால்வரும் கிருஷ்ணருக்கு மிக நெருங்கிய பக்தர்கள். அதே சமயம் அங்கே ஹஸ்தினாபுரியில் வாழ்ந்து வந்த துரியோதனனும் ஸ்ரீகிருஷ்ணரை விருந்துக்கு அழைக்க விரும்பினான். துரியோதனன் பாண்டவர்களின் எதிரி என்பதையும் அவர்களுக்குள் மகாபாரதப் போர் நடந்ததையும் நீங்கள் அறிவீர்கள். துரியோதனன் மிகவும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் ஸ்ரீகிருஷ்ணருக்காக பிரம்மாண்டமான அளவில் விதவிதமான உணவுப் பதார்த்தங்களை சமைக்கச்

செய்தான். லட்டு, பேரா, கிச்சடி, பூரி, நெய், பாயாசம் இப்படி எத்தனை எத்தனையோ விதம் விதமான பண்டங்களைச் செய்து அவற்றைத் தங்கத் தட்டுகளில் வைத்திருந்தான். அருந்த தண்ணீர் மற்றும் பதார்த்தங்களை யெல்லாம் கூட தங்கக் கிண்ணங்களில் வைத்திருந்தான். ஆனால் அவனுக்கு ஸ்ரீகிருஷ்ணரிடம் சிறிதும் பக்தி கிடையாது. தன் அந்தஸ்தை அனைவருக்கும் காட்டுவதற்காகவே துரியோதனன் அந்த விருந்தை அமைத்திருந்தான். ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று “என் அரண்மனையில் வந்து என்னுடன் விருந்து உண்ண வேண்டும்” என்று வேண்டினான்.

அதற்கு ஸ்ரீகிருஷ்ணரோ, “என்னால் எதையும் சாப்பிட இயலாது. எனக்குப் பசியேயில்லை. அதுமட்டுமல்ல. என்னிடம் உண்மையான அன்பு கொண்டு எவரொருவர் உணவு அளித்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் உன்னுடன் என்னால் உணவருந்த முடியாது. உனக்கு என்னிடம் அன்பு எதுவும் இல்லை. அதுமட்டுமல்ல, நான் இங்கே ஹஸ்தினாபுரிக்கு வந்த காரணம் உன்னிடம் ஒரு நல்ல காரியம் செய்யச் சொல்வதற்கே. ஆனால் நீயோ அதர்மமாக அதையும் மறுத்தாய். இப்படியிருக்கும் போது நான் எப்படி உன்னுடன் அமர்ந்து விருந்து உண்பது? நான் ஒரு பிச்சைக்காரனல்ல. எனக்குப் பசியுமில்லை.” என்று கூறி மறுத்து விட்டார்.

## தித்திக்கும் வாழைப் பழத்தோல்

இவ்வாறு துரியோதனனின் விருந்தழைப்பை மறுத்துக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் நேராகத் தனது நெருங்கிய பக்தனான ஏழை விதுரரின் வீட்டுக்கு அழையாத விருந்தாளியாக வலியச் சென்றார். விதுரர் ஸ்ரீ கிருஷ்ணரின் அன்புப் பக்தன் மட்டுமின்றி, அர்ஜீனன் மற்றும் நான்கு பாண்டவர்களுக்கும் பற்பல

தருணங்களில் உதவிகள் செய்தவர். எத்தனையோ ஆபத்துக்களிலிருந்து பாண்டவர்களை அவர் காப்பாற்றியிருக்கிறார். இதனால் ஸ்ரீகிருஷ்ணருக்கு விதுரரிடம் அளவு கடந்த அன்பு இருந்தது.

ஸ்ரீகிருஷ்ணர் விதுரரின் வீட்டை அடையும்போது விதுரர் வீட்டில் இல்லை. அவரது மனைவி விதுராணி மட்டுமே இருந்தாள். ஸ்ரீகிருஷ்ணர் உரிமையோடு விதுராணியிடம், "ஓ விதுராணி அம்மா, எனக்குத் தாங்க முடியாத பசி. ஏதாவது சாப்பிட இருந்தால் கொடு அம்மா!" என்று மன்றாடிக் கேட்டார். விதுராணிக்கோ ஸ்ரீகிருஷ்ணரின் மேல் அளவு கடந்த பக்தி. திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் ஸ்ரீ கிருஷ்ணர் அவள் வீட்டிற்கு வருகை தந்ததில் ஏற்பட்ட சொல்ல வொண்ணா ஆனந்தத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினாள். ஏதாவது பழங்களை முதலில் கொடுக்கலாம் என்று எண்ணி வாழைப் பழங்களைக் கொண்டு வந்தாள். அதையும் கூட உரிக்காமல் கொடுத்தால் கிருஷ்ணருக்கு உரிக்க சிரமமாக இருக்குமே என்று எண்ணி, அவற்றைத் தோலுரித்து உள்ளிருக்கும் பழத்தை மட்டும் கொடுக்க ஆரம்பித்தாள்.

ஆனால் தன் பிரேம ஆனந்தக் குழப்பத்தில் பழத்தைக் கிருஷ்ணருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அதன் தோலைக் கிருஷ்ணருக்கும் பழத்தைக் கீழேயும் போட்டுக் கொண்டிருந்தாள்! அவளது பேரானந்தமும் குழப்பமும் சேர்ந்து, தான் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் கிருஷ்ணருக்கு நேரில் ஊட்டிக் கொண்டிருந்தாள். ஸ்ரீ கிருஷ்ணரோ விதுராணி கொடுத்துக் கொண்டிருந்த வாழைப்பழத் தோல்களை அமிர்தம் போல் ஆனந்தமாகக் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்! அவை துவாரகையில் அவரது மேன்மை பெற்ற ராணிகளான ருக்மிணி, சத்யபாமா போன்றவர்கள் சமைத்துக் கொடுக்கும் மிக உயர் தரமான பதார்த்தங்களை விடவும் எவ்வளவோ மேலாக அவருக்குத் தித்திப்பாக இருந்தன.

இவ்வாறு விதுராணி தன்னை மறந்து பழத்தோல்களைக் கிருஷ்ணருக்கு சாப்பிடக் கொடுக்கவும் கிருஷ்ணர் அவற்றை ஆனந்தமாகப் புசித்துக் கொண்டிருக்கும் போது, வெளியே சென்றிருந்த விதுரர் வீட்டினுள் நுழைந்தார். நடந்து கொண்டிருந்ததைக் கண்ட விதுரருக்கு எதுவும் புரியவில்லை. "ஓ விதுராணி.. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

கிருஷ்ணர் விதுரருக்குப் புரியும் படியாக சைகை செய்தார், "விதுராணியிடம் எதுவும் பேச வேண்டாம். அவள் இப்போது தன் சுய நிலையில் இல்லை! என் மீது உள்ள பக்தியால் மூழ்கித் தத்தளிக்கிறாள்."

கணவரின் குரலைக் கேட்டு விதுராணி சுயநிலைக்குத் திரும்பினாள். கிருஷ்ணருக்குப் பழத் தோல்களைக் கொடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டு உணர்ந்து, இப்போது பழத்தின் உள் பகுதியை உண்ணக் கொடுத்தாள். தோலைக் கீழே போட்டாள்.

இதைக் கண்ட கிருஷ்ணர் ஏமாற்றமடைந்தது போல் "ஓ அம்மா, அந்த தோல்களைப் போல் இந்தப் பழம் ருசியாக இல்லையே!" என்றார்.

இந்த லீலையிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? கிருஷ்ணருக்கு நாம் நினைப்பது போல் "பசி" ஒன்றும் கிடையாது. அவருக்குப் பாலிலோ பழத்திலோ அல்லது பால்கோவாவிலோ மற்றும் எப்படிப் பட்ட தித்திக்கும் பதார்த்தங்களிலும் பசி கிடையாது. நாம் ஏதாவது பழங்களோ, பதார்த்தங்களோ படைக்கும் போது அவர் அதன் "ரசத்தைத்தான்' விரும்புகிறார். அந்த ரசம் என்ன? பரிசுத்தமான அன்பு அடங்கிய பரம பக்தியே அது!

கிருஷ்ணர் தன்னிடம் பக்தியில்லாத

எவரிடமிருந்தும் எதையுமே விரும்புவதில்லை. ஆனால் அதே சமயம் தன் பக்தனிடமோ தானாக வலியச் சென்றுப் பறித்து இழுத்து வாங்கிச் சாப்பிடுவார். தன் பக்தன் அவருக்கு வேண்டிய அளவுக்குச் கொடுக்கவில்லை யென்றாலும் கூட எந்த விதத் தயக்கமும் இல்லாமல் மேலும் கேட்டு வாங்குவார். அவர் சைதன்ய மகாபிரபுவாக தோன்றிய போது அவரது அன்புப் பக்தரான ஸ்ரீதராவிடம் அவ்வப்போது சண்டை செய்து அவர் விற்கும் பொருட்களை வலியப் பறித்துச் சாப்பிடுவார். ஸ்ரீதராவோ, “நான் உமக்கு இதைக் கொடுக்க மாட்டேன். நானோ பரம ஏழை. வேண்டுமானால் வேறு யாரிடமாவது போய் வாங்கிக் கொள்ளும்” என்று கூறி மறுப்பார். ஆனால் சைதன்ய மகா பிரபுவோ ஸ்ரீதரர் கூறுவது எதுவுமே காதில் வாங்கிக் கொள்ளலாம் வாழைப்பூ, பழங்கள் இப்படி எதையும் வலிய எடுத்துக் கொண்டு செல்வார். இதுதான் கிருஷ்ணரின் இயற்கைக் குணம்!

கிருஷ்ணர் பிச்சைக்காரன் அல்ல. அவர் பரம இறைவன். அவருக்குச் சொந்தமில்லாதவை எதுவுமே கிடையாது. இருந்தாலும் தன் பக்தர்களிடம் விளையாடி இன்பம் காண்பதில் அவருக்குக் கொள்ளை விருப்பம்!

## உறிப்பானையுடன் அந்தரத்தில் தொங்கினான்

சில சமயங்களில் கிருஷ்ணன் பிச்சைக்காரனைப் போல் கெஞ்சும் லீலைகளையும் கூட நிகழ்த்துவான். ஒரு நாள் யசோதா தன் மகனிடம் “கண்ணா இன்றைக்கு உன் பிறந்த நாள். நீ போய் உனக்குப் பிடித்தமான பசுங் கன்று ஒன்றைக் கொண்டு வந்து அதற்குப் பூஜை செய்” என்று உத்தரவிட்டாள்.

கிருஷ்ணனுக்கோ பெரும் மகிழ்ச்சி! உடனே குதித்து வெளியில் ஓடி கன்றுகள் கட்டப்பட்டிருந்த தொழுவத்திலிருந்து அன்னப் பறவையைப் போல் வெண்மை நிறங் கொண்ட ஒரு கன்றைத் தேர்ந்தெடுத்து அதன் கட்டை அவிழ்த்தான். நல்ல இளமையும் பலமும் கொண்ட அந்தக் கன்றோ உடனே அங்குமிங்குமாகத் துள்ளிக் குதித்து ஓடியது. கிருஷ்ணனோ அதைப் பிடிக்க பின்னால் ஓடினான். கடும் முயற்சிக்குப் பின்னால் அதைப் பிடித்து வீட்டின் முன் தாழ்வாரத்திற்குக் கொண்டு வந்தான். பின் அதன் கால்களைக் கட்ட முயன்றான். அந்தக் கன்றோ துள்ளி ஓடியது. கிருஷ்ணனும் அந்தக் கன்றும் ஒரு மல்யுத்தமே நடத்தினர் ஒருவழியாக இப்போது கன்றை வீட்டின் உள்ளே கொண்டு வந்து விட்டான் கிருஷ்ணன்.

அப்போது அந்த அறையில் மேலே பானையில் கட்டப்பட்டிருந்த வெண்ணைய் அவன் கண்களில் பட்டது. அவ்வளவுதான். வெண்ணெயைச் சாப்பிட வேண்டுமென்ற பேராவலில் அவன் வேறு எல்லாவற்றையும் மறந்து போனான். பிடித்துக் கொண்டு வந்த கன்றை வீட்டின் உள்ளே கொண்டு செல்ல வேண்டும் என்பதை அறவே மறந்து விட்டான். அதற்குப் பதிலாக, 'மேலே தொங்கும் இந்த வெண்ணெய் பானையை எப்படி எட்ட முடியும்?' என்று யோசனை செய்தான். பக்கத்தில் ஏறி நிற்க ஏணியோ அல்லது வேறு எந்த விதமான உபகரணங்களோ இல்லை. அவன் தன் சகாக்களுடன் மற்ற வீடுகளில் வெண்ணெய்த் திருடும் போதெல்லாம், அவர்கள் ஒருவர் மேல் ஒருவராக ஏறிக் கோபுரம் போல் நிற்பார்கள். கிருஷ்ணன் அவர்கள் மேல் ஏறி உயரே கட்டப்பட்டிருக்கும் உறியிலிருந்து வெண்ணெய் பானையை எடுத்துக் கொடுப்பான். ஆனால் இப்போது அவனது சகாக்கள் எவரும் இல்லை! நன்றாக யோசித்துப் பார்த்தான். “என்ன செய்ய?”

கொஞ்ச நேர சிந்தனைக்குப் பின், அவனுக்கு

ஒரு புத்திசாலித்தனமான எண்ணம் தோன்றியது! 'நான் இந்தக் கன்றுவின் மேலே ஏறி நின்றால் அந்த வெண்ணெய்ப் பானை என் கைகளுக்கு எட்டி விடும்!' அவ்வளவுதான்! மிகவும் சிரமப்பட்டு அந்தக் கன்றுவின் முதுகில் ஏறினான். ஏறி, அதன் மேல் கவனமாக நின்று கொண்டு, உறிப்பானையைப் பிடித்து அதனுள் கையை விட்டான். சுவையான வெண்ணெய்! ஆனால், அதே சமயம் அந்த பசுங்கன்றோ எதிர்பாராமல் திடீரெனக் குதித்து முன்னே ஓடியது! கிருஷ்ணனோ, பானையைப் பிடித்தவாறு அந்தரத்தில் தொங்கினான். பயந்து அலறிக்கொண்டு, “ஓ அம்மா! அம்மா!” என்று அழுது கொண்டு தாயார் யசோதாவை அழைத்தான்.

யசோதா தேவி அப்போது வெண்ணெய் கடைந்து கொண்டிருந்தாள். திடீரென தன் மைந்தன் பயந்து அழுதவாறு சத்தமாகக் கூப்பிடுவதைக் கேட்டு உடனே ஓடிவந்தாள். கிருஷ்ணன் உறியிலுள்ள பானையைப் பிடித்தவாறு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அந்தக் காட்சியைப் பார்த்த யசோதாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை! என்ன நடந்திருக்கும் என்பதை அவள் உடனே புரிந்து கொண்டு, “உனக்கு இது வேண்டியது தான்! நீ அங்கேயே தொங்கிக் கொண்டிரு! நான் உன்னைத் தொடக் கூட மாட்டேன்! அது மட்டுமல்ல, உனக்குத் தக்க தண்டனையும் தருவேன்” என்று கண்டிப்புடன் கூறினாள்.

கிருஷ்ணனோ தன் இக்கட்டான நிலையை உணர்ந்தான்: “என்ன செய்வது? அம்மா என்னை கீழே இறக்கியும் விட மாட்டாள். என்னால் எவ்வளவு நேரம் இப்படித் தொங்க முடியும்?” வேறு வழி எதுவும் இன்றி, இன்னமும் உரத்த குரலில், “அம்மா! அம்மா!” என்று தொங்கிக் கொண்டே கெஞ்சி அழுதான். வேறு வழியின்றி கடைசியில் யசோதா கிருஷ்ணனைக் கீழே இறக்கி விட்டாள்.

இவ்வாறு கிருஷ்ணன் எப்போதும் அட்டகாசம் செய்து கொண்டேயிருப்பான். இதனால் தான் கோபியர்களின் அன்பு கிருஷ்ணனின் மேல் மென் மேலும் வளர்ந்தது. குறிப்பாகத் தன் தாய் யசோதாவிடமிருந்து அவன் கொள்ளை கொள்ளையாகப் பாசத்தைப் பெற்றிருந்தான்.

## கையும் களவுமாக பிடிபட்டான்

இன்னொரு நாள், என்றும் வழக்கம் போல் கிருஷ்ணனின் மேல் புகார் ஒன்றை யசோதாவின் தோழியான ஒரு கோபி கூறிக் கொண்டிருந்தாள்: “ஓ யசோதா! இன்று காலையில் உன் மகன் வழக்கம் போல் என் வீட்டில் வெண்ணெய் திருட வந்தான். அவன் உள்ளே வரும் போது நான் எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைத்திருந்ததைப் பார்த்தான். அன்று நான் வெண்ணெய் எதுவும் வைத்திருக்கவில்லை. எனவே தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த என் பச்சிளம் குழந்தையைப் பலமாக கிள்ளி விட்டு ஓடி விட்டான். என் பையனோ திடுக்கிட்டு எழுந்து “ஓ” வென்று அழ ஆரம்பித்தான். வீட்டில் அவனுக்குத் திருடுவதற்கு வெண்ணெய் இல்லையென்றால் இப்படி எல்லாம் அட்டகாசம் செய்கிறான்! ஆனால் வீட்டில் வெண்ணெய் இருந்து அவனுக்குப் பிடிக்கவில்லையென்றால் எல்லா பானைகளையும் அடித்து உடைத்து விடுகிறான்.”

இதைக் கேட்ட யசோதா,“என் மகன் கிருஷ்ணன் மிகவும் குறும்புத் தனமாக இருக்கிறான். இப்படி இவன் வீடு வீடாகச் சென்று அட்டகாசங்கள் செய்வதால், நான் அவனுக்குச் சரியான பாடம் ஒன்று கற்பிக்க வேண்டும்” என்று நினைத்துக் கொண்டாள். அந்த கோபியோ, “ஹூம் நான் சொல்வதை யசோதா நம்பவே மாட்டேன் என்கிறாளே! இனி கிருஷ்ணனை நான் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்தால்

மட்டுமே இவள் நம்புவாள். நான் ஒரு நாள் திட்டம் போட்டு மறைந்திருந்து அவனைப் பிடித்து யசோதாவின் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன் பார்! அப்போது தான் தன் மகன் என்ன மாதிரிக் குறும்புக்காரன் என்று தெரியும்” என்று மனதினுள் நினைத்துக் கொண்டாள்!

ஒரு நாள் அதிகாலையில் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே கிருஷ்ணன் அந்தக் கோபியின் வீட்டிற்கு வெண்ணெய் திருடச் சென்று விட்டான். அவளோ கிருஷ்ணனை இன்று எப்படியும் கையும் களவுமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிரத் திட்டத்துடன் மறைவில் ஒளிந்து கொண்டிருந்தாள். கிருஷ்ணன் வழக்கம் போல் பானைகளிலிருந்து வெண்ணெயைக் கைவிட்டு அள்ளி அங்குமிங்குமாக திருடி உண்டான். இது தான் சமயமென்று மறைந்திருந்த கோபி லபக்கென்று குதித்துக் கிருஷ்ணனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டாள். “இப்போது உன்னை கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டேன்.. இப்போதே உன்னை நான் யசோதாவிடம் கொண்டுச் செல்வேன்!” என்று வெற்றி கரமாக கொக்கரித்தாள். “இப்போது தன் மகன் ஒரு பெரிய கள்ளன் என்பதை யசோதா நம்பியே ஆகவேண்டும்!” என்று நினைத்து மகிழ்ந்து கொண்டாள்.

கிருஷ்ணன் தன்னிடமிருந்து நழுவி தப்பி ஓட விட முடியாமலிருக்க அவள் ஒரு ஊகம் செய்தாள். ஒரு பெரிய போர்வையினால் கிருஷ்ணனைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தர தரவென்று கையுடன் இழுத்துக் கொண்டு தாயார் யசோதாவிடம் கொண்டு வந்தாள். வெற்றிக் குரலுடன், “ஓ யசோதா! ஓ யசோதா! இங்கே வந்து பார். என் வீட்டில் வெண்ணெய் திருடிய உன் மகன் ஒரு மகா கள்வன்! நான் உன்னிடம் உன் மகனின் களவுகளைப் பற்றி எத்தனை தடவைகள் சொல்லியும் நீ இதுவரை அவற்றை நம்பவேயில்லை. இப்போது நீயே வந்து பார். நான் சொல்வதை இன்று

நீ நம்பியே ஆக வேண்டும்!” என்றாள்.

தன் சக தோழி வெளியேயிருந்து இவ்வாறு கூவியதைக் கேட்டு யசோதா வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தாள். வரும் போது தன் மகன் கிருஷ்ணன் கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்ததையும் பார்த்தாள். ஒன்றும் புரியாமல் வெளியே வந்து, “எங்கே என் மகன்?” என்று கேட்டாள். வெற்றிப் புன்னகையுடன் கிருஷ்ணனைச் சுற்றியிருந்த போர்வையை நீக்கிக் கொண்டே “இதோ பார்!” என்றாள். ஆனால் போர்வையிலிருந்து வெளியே வந்தது கிருஷ்ணன் அல்ல! அந்த கோபியின் சொந்த மகன்!

அதே நேரம் கிருஷ்ணன் உறக்கத்திலிருந்து எழுந்து மெதுவாக வீட்டின் வெளிப்புறம் சிணுங்கிக் கொண்டே வந்தான். “ஓ அம்மா, நீயே பார். இவர்களெல்லாம் வேண்டும் என்றே என் மேல் அபாரமாகப் பழியைப் போடுகிறார்கள். நான் அவர்கள் வீட்டுக்குச் செல்வதேயில்லை! இவர்கள் அனைவரும் பொய்யர்கள் அம்மா! இவர்கள் இப்படி வேண்டாத பொய்களைச் சொல்வதால் நான் இப்போது போய் அவர்கள் வீட்டிலிருந்து கொஞ்சம் வெண்ணெயை கண்டிப்பாகத் திருட வேண்டும்!” என்று தன் பவள செவ்வாயினால் உரைத்தான்.

# அத்தியாயம் மூன்று

## பிரேம பக்தியினால் மட்டுமே கட்டுப் படுபவன்

### யசோதாவின் பேரழகு

யசோதா தன் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போதெல்லாம் தன் மகன் கிருஷ்ணனுக்கு எப்படியெல்லாம் விதம் விதமாக உணவுப் பதார்த்தங்கள் செய்து ஊட்டலாம் என்ற சிந்தனையிலேயே தான் இருப்பாள். குறிப்பாக கிருஷ்ணனுக்கு மிகவும் பிடித்தமான வெண்ணெயை மிகவும் ருசியுடன் செய்து கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள். “மற்ற எல்லா கோபியர்களும் தங்கள் கைகளால் தயாரித்து வெண்ணெயைக் கிருஷ்ணனுக்கு மிகப் பிரியத்துடன் உண்ண அளிக்கின்றனர். தங்கள் சொந்த கைகளால் கடைந்ததால் தான் அது மிகவும் சுவையாயிருக்கலாம். இன்று வரை நானாக என் கைகளால் வெண்ணெய் கடைந்ததே யில்லை. வேலைக்காரர்கள் தான் அந்த வேலையைச் செய்தனர். ஆனால் இன்றிலிருந்து நானே போய் என் கைகளால் பாலைக் கறந்து, நானே அதைக் காய்ச்சி, நானே அதைக் கடைவேன். நானே அந்தத் தயிரைக் கடைந்தால் தான் அதிலிருந்து சுவையான வெண்ணெய் கிடைக்கும். அதை கிருஷ்ணன் மிகவும் விரும்பி உண்பான்!” என நினைத்தாள்.

இவ்வாறு யசோதா உறுதியெடுத்துக் கொண்டு செயலில் இறங்கினாள். அன்று தீபாவளி, எல்லா வேலைக்காரர்களையும் தன் கணவர் நந்த

கோபாலரின் மூத்த சகோதரரான உபநந்தரின் வீட்டுக்கு அனுப்பி வைத்திருந்தாள். மேலும், உபநந்தரின் மாளிகையில் தீபாவளிக்கு உதவி செய்ய பலதேவனையும் ரோகிணியுடன் கூட அனுப்பி வைத்திருந்தாள்.

யசோதா மட்டும் வீட்டில் தனியாக தயிரைக் கடைந்து கொண்டிருந்தாள். அப்போது விடியற்காலை. செங்கதிர் ஆதவன் சில்லென்று அமைதியாயிருந்த விடியல் பொழுதினைக் கிழித்தவாறு மேலே வர முயன்று கொண்டிருந்தான். யசோதா மிகவும் அழகுள்ளவள். அவள் அவ்வளவு அழகாக இல்லாவிட்டால் கிருஷ்ணன் எப்படி இவ்வளவு அழகாகப் பிறந்திருப்பான்?

யசோதாவின் அழகை வர்ணிப்பது மிகவும் கடினம். ஒரு பெண்ணிற்கு உரித்தான அனைத்து இலட்சணங்களையும் அவள் ஒருங்கப் பெற்றிருந்தாள். அன்று தீபாவளி ஆதலால் மிகவும் மென்மைனான பட்டுப் புடவையை அணிந்திருந்தாள். அந்தக் காலத்தில் மெல்லிய பட்டுத் துணி மணிகள் செய்வதில் இந்தியர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். சாதாரணமாக ஒரு புடவையின் நீளம் சுமார் முப்பது அடிகள். தேர்ச்சி பெற்ற நெசவுத்தொழில் வல்லுனர்கள் செய்த மெல்லிய பட்டுப் புடவையை ஒரு சிறு நகக்கண் அளவான துவாரம் வழியாக இழுத்து எடுத்து விடலாம். அவ்வளவு தூரம் சிறிய நூல்களால் அவர்கள் நெய்வார்கள். அப்படிப்பட்ட மென்மையான புடவையை யசோதா அன்று அணிந்திருந்ததால் அவள் கொள்கை அழகுடன் திகழ்ந்தாள்.

அவள் தயிரை தாழியில் இட்டு, ஒரு தூணின் பக்கம் அதை நிறுத்தி வைத்து, கடைகின்ற மத்தை ஒரு கயிற்றால் கட்டி தயிரைக் கடைய ஆரம்பித்தாள். மத்தின் மேல் சுற்றியிருந்த கயிற்றின் ஒரு முனையை இடது கையாலும் மற்ற முனையை வலது கையாலும்

பிடித்துக் கொண்டு கடைந்தாள். அந்தக் காட்சி மிகவும் ரம்மியமாக இருந்தது.

யசோதா இவ்வாறு தயிரைக் கடைந்து கொண்டிருந்த போது அவள் எந்த விதமான உணர்ச்சி வசத்தில் இருந்தாள்? தன் மைந்தனின் பால லீலைகளைத் தன் இதயம் குளிர நினைத்து நினைத்துக் பாடிக் கொண்டேயிருந்தாள்.

*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*
*கோவிந்த தாமோதர மாத வேத்தி!*

(சாதாரண மக்கள் ஸ்ரீகிருஷ்ணரின் உண்மையான பிறவி ரகசியங்களை அறிய மாட்டார்கள். தேவகிக்கு கிருஷ்ணரின் அம்சமான ஸ்ரீநாராயணர் அவதரித்த அதே சமயம் யசோதாவிற்கு ஸ்ரீகிருஷ்ணரும் யோக மாயாவும் கூடவே பிறந்தார்கள். வசுதேவர் ஸ்ரீநாராயண கிருஷ்ணரைக் கொண்டு கிடத்தும் போது அவர் யசோதா கிருஷ்ணனிடம் ஒன்றாகச் சேர்ந்தார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.)

இப்படிப் பாடிக் கொண்டே, யசோதா தன்னை மறந்து தன் பால கிருஷ்ணனின் சிந்தனையில் முழுவதுமாக மூழ்கியிருந்தாள். அவளது இதயம் உருகிக் கொண்டிருந்தது. கண்களை மூடிக் கொண்டாள். ஆனால் கண்களோ குளமாகி ஆனந்தக் கண்ணீர்த் துளிகள் அவளது இரு கன்னங்கள் வழியாக முத்து முத்தாகப் பாய்ந்து கொண்டேயிருந்தன!

## யசோதாவின் பாட்டரங்கம்

வைஷ்ணவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரையும் அவரது மகிமைகளையும் பற்றிப் பாடும் போது எப்போதும் மிருதங்கத்துடன் பாடுவது வழக்கம். மிருதங்கத்தின்

அகலமான பக்கத்திலிருந்து “தங்.தங்” என்று ஆழ்ந்த சப்தம் வரும். குறுகிய பக்கத்திலிருந்து “திக்.திக்” என்று உயர்ந்த ஸ்தாயியில் சப்தம் வரும். மேலும், பாடுபவர்கள் தங்கள் கைகளில் சிறிய சிங்கியினால் இனிய நாதத்தைத் தாளத்தோடு தட்டிப் பாடுவார்கள். எல்லாம் சேர்ந்து அவை தேன் போல் இனிக்கும்.

யசோதா, தன் பால கிருஷ்ணனை நினைத்துக் கொண்டே ஆனந்தமுடன் பாடிய போது, அவள் கடைந்து கொண்டிருந்த மத்தும் தாழியும் “திக்.திக்.தங்!” என்று மிருதங்கத்தைப் போல் பக்க வாத்தியமாக ஒலித்தன. அதே சமயம் அவள் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும், கையில் அணிந்திருந்த அடுக்கான தங்க வளையல்களும் சேர்ந்து இனிமையான சிங்கி நாதத்தை எழுப்பின. அவற்றின் தாளத்திற்கேற்ப யசோதா பாடிக் கொண்டிருந்தாள். மொத்தத்தில் அது ஒரு சங்கீர்த்தனத்தை மிகைப் படுத்தின. கிருஷ்ண கானத்தைக் கேட்காதவர்கள் உயிர் வாழ்ந்து என்ன பயன்? திக்.திக்.தங்.சிக்! திக்.திக்.தங்.சிக்!

## யசோதாவைத் தேடும் கிருஷ்ணன்

இவ்வாறு யசோதா தன் கிருஷ்ணனின் நினைவில் முற்றிலும் மூழ்கியிருந்தாள். அப்போது கிருஷ்ணன் தன் தாயாருடன் உறங்கிய படுக்கையிலிருந்து மெதுமாக எழுந்தான். கண்களை இன்னமும் மூடியே வைத்துக் கொண்டு, தாயாரைத் தன் கைகள் மூலமாகச் சுற்றிலும் தேடிப் பார்த்தான். பக்கத்தில் காணோம் என்று உணர்ந்ததும், சிணுங்கிக் கொண்டே, “அம்மா, அம்மா!” என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

தன் தாயார் அந்தப் பக்கமெங்கும் இல்லை என்பதை உணர்ந்தவுடன் கொஞ்சம் சத்தமாகவே அழ

ஆரம்பித்தான். கண்களைத் தன் பிஞ்சுக் கரங்களால் துடைத்தான். அவற்றில் கண்ணீர் எதுவுமில்லை. ஆனால் அவன் துடைக்கும் போது தாயார் அவனுக்குக் கண்களில் தீட்டியிருந்த கருமையான மையெல்லாம் கலைந்தன. தாமரை மலர் இதழ்கள் போன்ற அவனது கண்களுடன் சேர்ந்து அவை பேரழகு பெற்று விளங்கின.

இப்போது இன்னமும் சத்தமாக அழ ஆரம்பித்தான். ஆனால் அப்போதும் தாயார் யசோதா வரவில்லை. யோசித்துப் பார்த்தான், "ஹூம்.. இனி நான் இந்தப் படுக்கையிலிருந்து கீழே இறங்கித் தான் ஆக வேண்டும்" என்று நினைத்தான். ஆனால் படுக்கையோ உயரமாக இருந்தது. எப்படி அவனால் கீழே இறங்க முடியும்? எல்லாக் கடவுள்களுக்கும் மேலான பரம இறைவனான அவனோ வரம்பற்றவன். கோடிக் கோடியாக, எண்ணிலடங்காத பிரம்மாண்டங்களைத் தன் உடலினுள் வைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பால கிருஷ்ணனோ இங்கே தன் படுக்கையிலிருந்து கீழே இறங்குவதற்குக் கூட சிரமப்படுகிறான்! என்னே அவனது திருவிளையாடல்!

அவனுக்கு எப்படியும் கீழே இறங்கி, தன் தாயார் யசோதாவிடம் செல்ல வேண்டும். அப்போது அவனுக்கு ஒரு ஊகம் தோன்றியது. முதலில் படுக்கையில் குப்புறமாகப் படுத்தான். பின் மெதுவாக பின்னோக்கி தன்னைப் படுக்கையிலிருந்து கீழே நழுவ விட்டான். மிகவும் கவனமாக, அங்குலம் அங்குலமாக தன்னைக் கீழே பின்னோக்கி நழுவ விட்டான். கடைசியில் தன் கால்கள் தரையில் தட்டிய பின், முழுவதும் தன்னை மறந்து பாடிக் கொண்டே தயிர் கடைந்து கொண்டிருந்த தன் தாய் யசோதாவை நோக்கி தத்தித் தத்தி நடந்தான்.

மேலும் அவன் தன் தூக்கத்திலிருந்து சரியாக இன்னும் விழிக்காததால் இங்குமங்குமாக தள்ளாடித் தள்ளாடி, அழுது கொண்டே நடந்தான்.

கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாக கன்னங்களின் மேல் உருண்டோடின. அவை கங்கை நதியின் நீரைப் போல் வெண்மையாக இருந்தன. அவனது கண் மையோ யமுனா நதியின் நீரைப்போல கருமை நிறமாயிருந்தது. யசோதா அவனுக்குத் தீட்டிய கண்மை, ஏற்கெனவே கருமை நிறமான அவனது உடலை இன்னமும் கறுப்பு நிறமாக ஆக்கியிருந்தது. இப்போது தன் தாயார் யசோதாவைக் கண்டதால் இன்னமும் உரக்க அழுதான். ஆனால் யசோதாவோ தன்னை முழுவதுமாக மறந்து, கடையும் மத்து எழுப்பிய மிருதங்க நாதத்தில் உரக்கப் பாடிக் கொண்டேயிருந்தாள். தன் மகன் கிருஷ்ணனின் அழுகை இப்போது கூட அவளது காதுகளில் விழவேயில்லை!

கிருஷ்ணன் யசோதாவின் பக்கம் வந்து, தன் இடது கையால் அவள் கடைந்து கொண்டிருந்த மத்தையும், வலது கையால் அவளது முந்தானையையும் பற்றிப் பிடித்துக் கொண்டான். யசோதா இன்னமும் தன்னை மறந்திருந்தாள். “இது என்ன? யார் இதை நிறுத்தியது?” என்று வியந்து கண்ணைத் திறந்து பார்த்தாள். அங்கே தன் பாலகிருஷ்ணன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

“ஓ என் கண்ணன் வந்திருக்கிறான்!”

அழுதவாறு நின்றிருந்த தன் மகனைக் கண்டதும் தயிர் கடைதலை உடனே நிறுத்தி விட்டு கிருஷ்ணனைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள். அவன் இன்னமும் அழுது கொண்டிருந்ததால். அவனது கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்தாள். கிருஷ்ணனை அமர்த்தி, முத்தமிட்டு, தன் மார்பகத்தில் அணைத்து பாலூட்டினாள்.

# கொதித்து அவசரமடைந்த பால்

இப்போது கிருஷ்ணன் தன் அழுகையை முழுவதுமாக நிறுத்தியிருந்தான். ஆனால் யசோதாவோ தன் அழுகையை இப்போது தான் ஆரம்பித்திருந்தாள்! தன் நெஞ்சம் நெகிழ்ந்த ஆனந்தத்தில் உள்ளுக்குள்ளேயே அவள் அழுதாள். அப்போது தன் உடம்பிலுள்ள அனைத்து மயிர்களும் சிலிர்த்து நின்றன. இரண்டு கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி அவளுடைய மிருதுவான கன்னங்களில் ஓடின. பிரேம பக்தியில் முதிர்ந்த சுத்த கிருஷ்ண பக்தர்களுக்கு உண்டாகும் எட்டு விதமான பிரேம நிலைகளை அவள் உணர்ந்து கொண்டிருந்தாள். உடலெங்கும் ஆட்டம் கொண்டது. கட்டுக்கு அடங்காமல் உடல் வேர்த்தது. முதிர்ந்த கிருஷ்ண பக்தர்களுக்கு எட்டு விதமான பிரேம நிலைகள் உடலில் உண்டாவது சகஜம். யசோதா தன் கிருஷ்ணனின் மேலுள்ள தாய்ப் பாசத்தில் தன்னை முழுவதுமாக மறந்து பிரேம ஆனந்தத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தான்!

---

எட்டு விதமான பிரேம நிலைகள் (அஷ்ட, சாத்வீக பாவா):
1. உணர்வு மங்கி ஸ்தம்பித்து நிற்றல், 2. கட்டுக் கடங்காமல் வேர்த்தல், 3 மயிர்கள் செங்குத்தாக நிற்றல், 4. நாக்குளறி, பேச முடியாமல் திணறுதல், 5. உடல் ஆட்டம் கொள்ளுதல், 6. உடம்பின் நிறம் மாறுதல், 7. கண்களிலிருந்து கண்ணீர் பெருகி மடைபோல் வழிதல், 8. தன்னுணர்வை முழுவதுமாக இழந்து விடுதல்.

---

கிருஷ்ணன் தன் தாயாரின் மார்பில் கொஞ்சம் நேரமாகவே பாலருந்திக் கொண்டிருந்தான். அவன் நல்ல பசியுடனிருந்ததால் இன்னும் அவன் திருப்திப் படவில்லை. யசோதா தான் அடுப்பில் காய்க்க வைத்திருந்த பாலைக் கவனித்தாள். கொதித்து அது மேலே பொங்கி இப்போது வெளியே சிந்தவும் ஆரம்பித்திருந்தது.

தான் கொதிக்க வைத்த பால் கூட ஒரு கிருஷ்ண பக்தைதான். அந்தப் பால் தன்னை எவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும்? “கிருஷ்ணனின் வயிறோ மிகப்பெரியது. அதனுள் அனைத்து பிரம்மாண்டங்களும் நிற்கும். யசோதாவின் மார்பில் வரும் பால் கோடிக் கணக்கானப் பாற்கடல்களை நிரப்ப முடியும். என்றாலும் கிருஷ்ணனின் பசியோ அளவிட முடியாதது. கிருஷ்ணன் யசோதாவிடம் கோடிக்கோடியான வருடங்கள் பாலுண்டாலும், யசோதாவின் பால் சுரப்பு நிற்கவே நிற்காது. அப்படியானால் என்னால் கிருஷ்ணனுக்குச் சேவை செய்ய முடியாமலே போய் விடும். அப்படியானால் நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்? எனவே நான் என்னையே இந்தத் தீயில் மாய்த்துக் கொள்கிறேன்” என்று ஆவேசத்தால் அந்தப்பால் பொங்கி தீயினுள் விழுந்து கொண்டிருந்தது.

## குருதேவர் பக்தர்களைத் தொண்டில் ஈடுபடுத்துதல்

கிருஷ்ண பக்தர்களை எங்கே பார்த்தாலும் அவர்களது பக்தியின் சாரம் ஒரே விதமாகத்தான் இருக்கும். அவர்கள் அனைவருமே கிருஷ்ணரை விட்டுப் பிரிந்திருக்கும் துயரத்தில் தான் இருப்பார்கள். “நான் என் உடல், மனம் மற்றும் அனைத்து இந்திரியங்களையும் முழுவதுமாக கிருஷ்ணருக்கு உபயோகப் படுத்தவில்லையே! இப்படி நான் வாழ்வதில் அர்த்தம் எதுவுமே இல்லை. நான் உயிரை விட்டு விடுவதே மேல்” என்று தான் நினைப்பார்கள்.

ஆனால் நமக்கோ அப்படிப்பட்ட எண்ணங்கள் எதுவும் வருவதில்லை. ஏன் அவ்வாறு எண்ணங்கள் வருவதில்லை? காரணம் நமக்குச் சரியான பக்திப்

பயிற்சி (சாதனா) இல்லை! ஒருவன் சரியாகப் பயிற்சி செய்தால், நம் உயிரில் இயற்கையாக நிறைந்திருக்கும் கிருஷ்ண பக்தி வெளிப்பட்டு, கிருஷ்ணருக்கு பக்திச் சேவை செய்யும் ஆவல் தானாக வந்து விடும். அப்போது கிருஷ்ணர் உடனே நம்மிடம் தோன்றி, அவரது சேவையில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வார். யசோதா போன்ற சுத்த பக்தர்களை நமக்கு அனுப்பி தனக்குச் சேவை செய்யத் தூண்டுவார்.

கொதித்துத் தீயில் சாடிய பாலை யசோதா கண்டதும் அவளுக்கு அதன் அடக்க முடியாத பக்தி வேகம் புரிந்தது. “சரி சரி, நான் முதலில் உன்னை அவனுக்கு சேவை செய்ய விடுகிறேன். பின்னால் நான் அவனுக்குப் பாலூட்டி மற்ற சேவைகளைச் செய்து கொள்கிறேன்” என்று எண்ணினாள். இதே போல் தான் ஒரு உண்மையான குருவும் இருப்பார். கிருஷ்ணருக்குச் சேவை செய்ய ஆவலுடன் வரும் புதுப் புது பக்தர்களைச் சரியான வழியில் செலுத்தி அவர்களை சுத்த பக்தர்களாக முதலில் ஆக்குவார். இதுவே ஒரு குருவின் சரியான தொண்டு.

யசோதாவும் இப்படி ஒரு குருவே தான். தாய்ப் பாசத்துடன் (வத்சல்ய பாவா) கிருஷ்ணனிடம் பக்தி செலுத்துவதை உபதேசிக்கும் குரு அவள்! சூடான பாலுக்கும் கூட அதன் பக்தி சேவையைக் கிருஷ்ணனுக்கு அளிக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாள். மடியிலிருந்து பாலருந்திக் கொண்டிருந்த கிருஷ்ணனை தூக்கி யெடுத்துத் தரையில் விட்டு விட்டு நேராக அடுப்பிலிருந்து பொங்கி வடிந்து கொண்டிருந்த பாலை நோக்கி ஓடினாள். இப்படித்தாள் ஒரு உண்மையான குருவும் செய்வார். முதலாவதாக தன் சிஷ்யர்களையும் மற்ற பக்தர்களையும் கிருஷ்ணனின் முன்னால் கொண்டு போய் சேவையில் அமர்த்துவார். இதுதான் உண்மையான குருவின் இலட்சணம். தன்னை அவர் இரண்டாந்

தரமாகத் தான் பார்ப்பார். இதையே அன்று யசோதாவும் செய்தாள்.

## யசோதா பால கிருஷ்ணனை வென்றாள்

முன்பு, கிருஷ்ணன் பிறந்து ஆறே நாட்களாகியிருக்கும் சமயம், பூத்தனா என்ற அரக்கி கோகுல பிருந்தாவனத்துக்கு வந்து கிருஷ்ணனைக் கொல்ல முயன்றாள். அவள் தன் மார்பகங்களின் மேல் கொடிய நஞ்சைத் தேய்த்துக் கொண்டு ஒரு அழகான பெண் வடிவத்தை எடுத்துக் கொண்டு வந்திருந்தாள். கிருஷ்ணனுக்குத் தன் மார்பகத்திலிருந்து அவள் பாலை ஊட்டினாள். ஆனால், அவனோ அவளது உயிரையே உறிந்தான். ஆயிரக்கணக்கான யானைகள் அளவு பலம் கொண்டவளாக இருந்திருந்தும், அவளால் பாலகிருஷ்ணனின் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை! எதுவுமே செய்ய இயலாமல் பூத்தனா அங்கேயே மாண்டாள்.

ஆனால் இப்போதோ கிருஷ்ணன் நன்றாக வளர்ந்திருந்தான். யசோதா தன்னை தன் மடியிலிருந்து பலாத்காரமாகக் கீழே இறக்கி விட முயன்ற போது, கிருஷ்ணனோ தன் தாயைக் குரங்கு போல் தன் இரு கைகளால் கட்டிப் பிடித்துக் கொண்டு தன் வாயால் அவளது மார்பகத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டான். தன் முழுக் கவனத்தையும் செலுத்தி, “நான் உன் மடியிலிருந்து ஒரு போதும் இறங்க மாட்டேன்!” என்று மேலும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

பரம இறைவனான கிருஷ்ணனுக்குள் அனைத்தும் அடக்கம். அவனது மகிமை, ஐஸ்வரியங்கள், பலம் அனைத்தும் அளவிட முடியாதவை. அவனால் எல்லா உலகங்களையும் ஒரே

கணத்தில் அழிக்க இயலும். மிகப் பலம் பொருந்திய அரக்கர்களான கேசி, அகாசுரன், பூத்தனா, ஹிரண்யக்கசிப்பு, இராவணன் இப்படி எத்தனையோ பேர்களையோ வென்றவன். இருந்தாலும் தன் தாயார் யசோதாவிடம் அவன் பலமில்லாதவனே! கிருஷ்ணனை யசோதா அலாக்காகத் தூக்கித் தரையில் விட்டாள். கிருஷ்ணனை வெல்வது அவளுக்கு மிகவும் சுலபமாயிருந்தது. அதுமட்டுமல்லாமல், “நீ இங்கே உட்கார்” என்று கட்டளையும் இட்டாள். கிருஷ்ணன் எவ்வளவோ முயற்சி செய்துத் தடுத்துப் பார்த்தாலும், ஒரே கையில் அவள் கிருஷ்ணனை அலாக்காகத் தூக்கி கீழே உட்கார வைத்தாள். பாலகிருஷ்ணனால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. பாவம், அவனுக்கு எந்த உதவியுமில்லை!

நம் அனைவரும் இதிலிருந்து மிக முக்கியமான பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். எவர் ஒருவருக்குக் கிருஷ்ணரின் மேல் பிரேம பக்தி வருகிறதோ அவரிடம் கிருஷ்ணன் குழந்தையாகவே ஆகி விடுகிறான். அவனுடைய சக்தியான யோக மாயையினுள் தன்னை ஆளுமாறு விட்டு விடுகிறான். யோக மாயை தான் அவனது லீலைகள் அனைத்தும் சரி வர நடைபெற உதவி செய்பவள். கிருஷ்ணரின் அம்சமான யோக மாயை அவரை இப்படிக் குழந்தையாக்கி, லீலைகளில் அவரால் எதுவுமே செய்ய இயலாதவராகக் காட்டுகிறாள்.

பாலருந்திக் கொண்டிருந்த போது இடையில் தாய் யசோதா வலிய இழுத்து எடுத்ததால், கிருஷ்ணன் சத்தமுடன் அழ ஆரம்பித்தான். அவனுக்குக் கோபம் வேறு! “எனக்கு இன்னும் பசியே தீரவில்லை! அதற்குள்ளேயே என்னை விட்டுவிட்டு அடுப்பிலுள்ள பாலைக் காப்பாற்ற ஏன் போக வேண்டும்?” என்று பொருமினான்.

# தொண்டனுக்கும் தொண்டன்

இந்த லீலை, இன்னுமொரு புதிய பாடமொன்றைக் கற்பிக்கிறது. கிருஷ்ணருக்குத் தொண்டு செய்பவர்கள், தொண்டு செய்ய உபயோகிக்கும் மயிலிறகாலான விசிறி, சங்கு இப்படி எல்லாவற்றையும் எவ்வாறு கண்காணிக்க வேண்டும் என்பதே அது. இங்கே யசோதா கிருஷ்ணனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட அவனுக்குச் சேவை செய்யும் பொருட்களுக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளாள். ஏன்? இப்படித்தான் பக்தர்கள் இருப்பார்கள். இதைப் புரிந்துக் கொள்வது சிரமம் என்றாலும் கீழ் வரும் உதாரணங்கள் இதை விளக்கும்.

சில சமயங்களில் கிருஷ்ணன் புழுதிகளைத் தன் மேலும், அணிந்திருக்கும் அழகான துணிமணிகளின் மேலும் அப்பிக் கொண்டு வருவான். அதைக் கண்டதும் யசோதா, கிருஷ்ணனைச் செல்லமாக அடித்துத் தண்டிப்பாள்: “நீ பெரிய குறும்பன். நான் இப்போது தான் நன்றாக வெளுத்த துணி மணிகளை உனக்கு அணிவித்தேன். அதற்குள் இப்படி அழுக்காக ஆக்கியிருக்கிறாயே!” என்று.

இதே போல் தான், இப்போது கிருஷ்ணன் பசியால் அழுதாலும் கூட, அடுப்பிலிருந்து கொதித்துப் பொங்கி வழிந்த பாலைக் காப்பாற்ற அவள் ஓடினாள். தன் மகன் கிருஷ்ணனை விட, அந்தப் பால் ஏன் அவ்வளவு முக்கியமானதாகி விட்டது. அந்தப் பாலின் ஒரே பிரயோஜனம் கிருஷ்ணனுக்கு அதை உபயோகப்படுத்துவதே. அப்படியிருக்கும் போது கிருஷ்ணனுக்குப் பதிலாக ஏன் கிருஷ்ண சேவைக்கு உபயோகப் படுத்தும் வெறும் பாலைத் திருப்தி படுத்த வேண்டும்? இதே போல் தான் அவள்

கிருஷ்ணனின் சேவையில் பங்கேற்கும் துணி மணிகளுக்கும் அளித்தாள்.

இது தான் சுத்த பக்தியின் இலட்சணம். கிருஷ்ணனும் கூட தன் பக்தர்களுக்குத் தொண்டு புரிபவர்களைத் தான் மிகவும் விரும்புகிறான். தனக்கு நேரடியாக சேவை செய்பவர்களை அந்த அளவுக்கு விரும்புவதில்லை. இதைச் சரியாக புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

உதாரணமாக ஸ்ரீமதி ராதிகா ஸ்ரீ கிருஷ்ணரின் மிகவும் பிரியமான பக்தை. எவரொருவர் ஸ்ரீ மதி ராதிகாவுக்குச் சேவை செய்கிறார்களோ அவர்கள் தான் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவர்கள். நேராகத் தனக்குத் தொண்டு செய்பவர்களை விட இவர்களே மிகவும் பிரியமானவர்கள். ஸ்ரீமதி ராதிகாவிற்குத் தொண்டு செய்யும் ரூப மஞ்சரிக்கு ஒரு பக்தரோ பக்தையோ தொண்டு செய்தால் அது இன்னமும் சிறந்ததாகி விடுகிறது. “நீ ரூப மஞ்சரியின் சேவகனா? ஓ, நான் உனக்கு எல்லாவற்றையுமே கொடுத்து விடுகிறேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள்!” என்பார் கிருஷ்ணர். இது தான் பக்தியின் உண்மையான வடிவம்!

## அன்பின் பலம்

பாலகிருஷ்ணனுக்காக் காத்திருக்கும் பாலைக் காப்பற்றவே யசோதா ஓடினாள். தான் கொடுக்கும் தாய்ப்பால் மட்டுமின்றி இந்தப் பசும்பாலும் கிருஷ்ணனுக்குத் தேவை. “என் பாலிலிருந்து கிருஷ்ணனுக்கு தயிர், வெண்ணெய் இப்படி எதையுமே செய்ய முடியாதே. எனவே கண்டிப்பாக பசும்பால் முழுவதுமாக அடுப்பில் விழுவதை உடனே நிறுத்த வேண்டும்” என்று ஓடினாள்.

ஆனால் கிருஷ்ணனோ அழுது கொண்டிருக்கிறான். உண்மையில் அவன் அழுகிறானா? இல்லை! வெளியில் அவன் அழுவது போல் தோன்றினாலும், உள்ளுக்குள் அவன் மிகவும் ஆனந்தம் அடைந்தான்!

கிருஷ்ணன் இப்போது நினைத்தான்: “என்னை திருப்திப் படுத்தாமல் அம்மா என்னை விட்டு அங்கே போய் விட்டாளே! இதற்கு நான் இன்று ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். நான் என் குறும்பை ஆரம்பிக்கிறேன் பார்!”

மெதுவாக எழுந்து பக்கத்திலிருந்த வெண்ணெய் பானை ஒன்றை உருட்ட முயன்றான். ஆனால் அவனால் அதை அசைக்கக் கூட முடியவில்லை! அசுர பலம் பெற்ற பூத்தனா என்ற அரக்கியையே கொன்றவனுக்கு, யசோதாவின் தாய்ப் பாசத்தால் கட்டுண்டதால் அவனால் ஒரு பானையைக் கூட அசைக்க இயலவில்லை!

எங்கெல்லாம் கிருஷ்ணன் மேல் பிரேம பக்தி உள்ளதோ அங்கெல்லாம் அவன் தன் சக்தியையும் ஐஸ்வரியத்தையும் பக்தர்களிடமிருந்து மறைத்துக் கொள்கிறான். எனவே தான் அவர்கள் முன்னால் கிருஷ்ணன் சாதாரணமான குழந்தையைப் போல பலமொன்றும் இல்லாதவனாகத் தோன்றுகிறான்.

## தயிர்ப் பானையை உடைத்தல்

“என்ன செய்யலாம்?” என்று கிருஷ்ணன் தனக்குள் எண்ணினான். “என்னால் இந்தப் பானைகளை உருட்ட முடியாது. எனவே இதை உடைக்கப் போகிறேன்! பானையின் மேல் பகுதி மட்டும் தான் கனமாக உள்ளது. அடிப்பாகம் அப்படியில்லையே. சிறு உலக்கையால் அடியில்

இடித்தால் எளிதில் உடைந்து விடும்!” ஆம். அதைத்தான் கிருஷ்ணன் செய்தான். பக்கத்தில் கிடந்த ஒரு சிறு உலக்கையினால் அந்தப் பானையின் அடியில் இடித்தான்! பானையின் அடிப்பாகத்தில் சரியான ஓட்டையொன்று விழுந்தது. தயிர் அந்த ஓட்டை வழியாக வெளியே பீறிட்டுப் பாய்ந்தது. உள்ளே நிறைய தயிர் இருந்ததால் அதன் அழுத்தத்தில் அது தாரையாக வேகத்துடன் வெளியில் பீறிட்டுப் பாய்ந்து சமையலறை முழுவதும் வெள்ளம் போல் ஓடியது.

இதைக் கண்ட கிருஷ்ணனுக்கோ ஒரே ஆனந்தம்! தன் கைகளைத் தட்டி ஒலி எழுப்பியவாறு சத்தமுடன் சிரித்தான். மறுகணம் அவனுக்குத் தன் தாயாரின் நினைவு வந்தது, “அம்மா இதைப் பார்த்தால் என்னை சும்மா விட மாட்டாளே!” இப்போது அவனது முகத்தில் பயம் குடி கொண்டது. இதை அப்படியே விட்டு விட்டு உடனடியாக வேகமாக ஓடி விடுவது தான் புத்திசாலித்தனம் என்று எண்ணி அங்கிருந்து ஓடினான்.

ஓடி, பக்கத்திலிருந்த இன்னொரு அறைக்குள் நுழைந்தான். “நான் இங்கு ஒழிந்து கொண்டால் அம்மா என்னைக் கண்டு பிடித்துக் கொள்ளவே மாட்டாள்” என்று எண்ணினான். தனது யோக மாயையின் சக்தி எப்படி கிருஷ்ண லீலைக்கு வேண்டிய அனைத்தையும் செவ்வனே செய்கிறது பாருங்கள். தன் பால பருவ லீலையில் எப்படி ஒரு சாதாரணக் குழந்தை போல் நடிக்கிறான்!

மேலும் சமையலறையில் வெள்ளமாக ஓடிய தயிரின் மேல் அவன் தன் கால்களையும் கைகளையும் போட்டுக் கிளறியதால் அவன் நடந்த கால் தடங்கள் சமையலறையிலிருந்து அவன் எங்கெல்லாம் சென்றானோ அனைத்தையும் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தன!. அந்த வெண்மையான இனிய தயிரில் தோய்ந்த அவனது கால் தடங்களைப் பார்த்தே

தன் தாயார் இங்கே வந்து விடுவாள் என்பது அவனுக்கு புரியவில்லை!

## தன் பக்தர்களுக்கு வழங்குதல்

கிருஷ்ணன் இப்போது அடுத்த அறைக்குள் நுழைந்தான். அங்கே தரையில் தானியங்களை அரைக்கும் ஒரு உரலைப் பார்த்தான். அதன் மேலே உறியில் ஒரு பெரிய பானையில் வெண்ணெய் தொங்கிக் கொண்டிருந்தது. அவ்வளவு தான்! அவன் நாவில் நீர் சுரந்தது. எப்படியாவது அதை எடுத்துச் சாப்பிட வேண்டுமென்று தீர்மானித்து. உரலின் மேல் ஏறி கையை நீட்டிப் பானையினுள்ளிருந்த வெண்ணெயை வாரி எடுத்தான். அந்த அறையின் இன்னொரு பக்கம் வெளியில் திறந்திருந்தது. எனவே இதைக் கண்டதும் அங்கே காக்கைகளும் குரங்குகளும் வந்து கூடின. கிருஷ்ணன் ஒவ்வொன்றுக்கும் வெண்ணெயை வாரி வாரி அளித்தான்.

கிருஷ்ணனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. “நான் முன்பு இராமச்சந்திரராக அவதாரம் எடுத்துக் காட்டில் வாழ்ந்த போது இலங்கைக்குச் செல்ல பாலம் கட்டுவதற்காக இந்தக் குரங்குகள் எவ்வளவு சிரமப்பட்டு இரவும் பகலுமாக உழைத்தன! என்னால் அப்போது அவற்றிற்கு சரியாக உணவு கூட அளிக்க முடியவில்லை. இப்போது நான் அவை திருப்திப்படும் வரை வெண்ணெயை ஊட்டுவேன். இந்தக் காகங்கள் எல்லாம் எனது பிரிய பக்தனான காக்க பூசந்தியின் வழியில் வந்தவைகளே. எனவே நான் அவற்றிற்கும் வெண்ணெயை ஊட்டுவேன்.”

இவ்வாறு இங்கே கிருஷ்ணன் ஆனந்தமாக குரங்குகளுக்கும் காாக்கைகளுக்கும் வெண்ணெய் விருந்து செய்து கொண்டிருக்கும் போது யசோதா

சமையலறையை விட்டு கிருஷ்ணனுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த இடத்திற்கு திரும்பி வந்தாள். அறை முழுவதும் தயிர் வெள்ளமாகக் கிடப்பதையும் உடைந்த பானையையும் கண்டு திடுக்கிட்டாள். மேலும் தரையில் பதிந்திருந்த தயிரால் தோய்க்கப்பட்ட பிஞ்சுக் கால் தடங்களையும் கண்டு என்ன நடந்திருக்கும் என்பதை உடனே ஊகித்துக் கொண்டாள். அந்தக் கால் தடங்களைப் பின்பற்றி நடந்து கிருஷ்ணன் இப்போது நின்று கொண்டிருந்த அறையை அடைந்தாள்.

அந்த அறைக்கு இரண்டு கதவுகள் இருந்தன. ஒன்று உள் வீட்டு அறை வழியாக வருவது. இன்னொன்று வீட்டின் வெளிப்புறத்திலிருந்து உள்ளே வருவது. யசோதா உள் அறையிலிருந்து. பூனை எப்படி காய்ந்த சருகில் சத்தம் கேளாதவாறு நடக்குமோ அதே போல் மெதுவாக நடந்து அங்கே வந்தாள்.

தன் தாயார் வருவதைக் கிருஷ்ணன் காணவில்லை. காரணம் அவன் குரங்குகளும் காக்கைகளும் வந்திருந்த வெளிக்கதவைப் பார்த்து நின்றிருந்தான். ஆனால் காக்கைகளும், குரங்குகளும் யசோதாவைக் கண்டதும் அங்குமிங்குமாகச் சிதறி நாலா பக்கங்களிலும் ஓடின. அவை அனைத்தும் ஓடுவதைக் கண்டதும் கிருஷ்ணன் “ஓ, இவை எங்கே ஓடுகின்றன” என்று நினைத்தான். மறுகணம் அவனுக்கு புரிந்தது, “ஆ! இங்கு வேறு யாரோ வந்திருக்கிறார்கள்!” யசோதா கிருஷ்ணனைப் பிடிக்க முயன்ற போது தனது தாயாரின் உருவத்தைப் பின்னால் கண்டான். “ஓ! அம்மா என்னைப் பிடிக்க வந்து விட்டாள்!” என்று பயந்தான். அவ்வளவுதான்! உரலிலிருந்து உடனே குதித்து உள் வீட்டினுள் ஓட ஆரம்பித்தான்!

## பரமனின் வளையலான ஓட்டம்

கிருஷ்ணன் தன் பலம் அனைத்தையும் சேர்த்து வீட்டு அறைகளினுள் ஓடினான். யசோதாவிடம் பிடிபடக்கூடாது என்று அங்குமிங்குமாக வளைந்து வளைந்து ஓடினான். ஆனால் யசோதா தன் சிறுத்த இடையுடனும் கனத்த மார்பகங்களுடன் அவ்வளவு வேகமாக ஓட முடியாமல் சிரமப்பட்டாள். கிருஷ்ணன் புத்திசாலித் தனமாக வளைந்து வளைந்து ஓடியதால் யசோதாவிற்கு அவனைப் பிடிக்க முடியவில்லை. இருப்பினும் அவன் தன் தாயார் கையில் பிடிபட்டு விடுவோமா என்று பயந்து ஒரு யூகம் செய்தான். "நான் வீட்டின் உள்ளே ஓடக் கூடாது. வெளியே ஓட வேண்டும்!" என்று தீர்மானித்தான்.

வேத காலங்களில் பெண்கள் தனியாக வீட்டின் வெளியே வர மாட்டார்கள் என்றும், அதனால் அம்மா கண்டிப்பாக வெளியே வர மாட்டாள் என்றும் நினைத்தான். "நான் வெளியே ஓடினால், அம்மா என்னை வெளியில் வந்து துரத்தமாட்டாள்" என்று நம்பினான்.

## அன்பின் வேகம்

கிருஷ்ணன் இப்போது வெளியே ஓட ஆரம்பித்தான். யசோதா வெளிவாசல் வரை வந்தாள். "ஓ, என்ன செய்வது?" என்று நினைத்தாள். அக்கம் பக்கம் பார்த்தாள், யாரும் இதைக் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்ததும், வலது கையில் ஒரு கம்பையும் தூக்கிக் கொண்டு, தன் குறும்புப் புதல்வன் பால கிருஷ்ணனைத் துரத்திக் கொண்டு அவளும் ஓட ஆரம்பித்தாள்.

கிருஷ்ணன் எவ்வளவு ஓடியும் யசோதாவின் வேகத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

கடைசியில் தன் இடது கையால் கிருஷ்ணனை யசோதா பிடித்து விட்டாள். அவளது வலது கையில் இருந்த கம்பைப் பார்த்ததும் கிருஷ்ணனுக்கு ஒரே பயம். தாயாரின் கால்களைச் சுற்றி சுற்றி வந்தான்.

இங்கே இது நமக்கு ஒரு நல்ல பாடமாக வருகிறது. கிருஷ்ணனோ எல்லாவற்றிற்கும் மேலான முடிவான பலன் (சாத்தியம்). அந்த சாத்தியத்தை அடைவதற்காகவே பக்தர்கள் சாதகம் செய்கின்றனர் கிருஷ்ணனே அவர்களின் அன்பின் எல்லைப் பொருள். இங்கே கிருஷ்ணனைப் பிடிக்க யசோதா அவனை விடவும் வேகமாக ஓட வேண்டியிருந்தது. இதே போல் தான், நாம் கிருஷ்ணனை அடைய விரும்பினால் நமது சாதகத்தில் அவ்வளவு வேகமும் சிரத்தையும் இருக்க வேண்டும்.

கிருஷ்ணனுக்குத் தன் பக்தர்களிடம் மிகவும் அக்கறையும் அன்பும் உண்டு. அதேபோல் பக்தர்களுக்கும் கிருஷ்ணனிடம் அன்பு உண்டு. இவை இரண்டும் சரி சமமாக, அதாவது கிருஷ்ணனுக்கு ஒரு பக்தனிடமுள்ள அன்பும் அந்த பக்தனுக்குக் கிருஷ்ணனிடமிருக்கும் அன்பும் அளவில் சரியாக இருந்தால், அந்த பக்தனால் கிருஷ்ணனை பிடிக்க முடியாது.

ஆனால் அதே சமயம் அந்த பக்தனுக்கு, கிருஷ்ணனுக்குத் தன்னிடம் இருக்கும் பக்தியை விட அதிக அளவு அன்பு கிருஷ்ணனிடமிருந்தால். அவனால் கிருஷ்ணனை பிடிக்க முடியும். இங்கே கிருஷ்ணனுக்குத் தன் தாய் யசோதாவிடம் அளவு கடந்த அன்பு உள்ளது. ஆனால் யசோதாவுக்கோ அதை விடவும் மிக அதிகமான அளவில் கிருஷ்ணனிடம் அன்பு இருந்தது. இந்தக் காரணத்தால் தான் அவளால் கிருஷ்ணனைப் பிடிக்க முடிந்தது. இது தான் இந்த லீலையில் பொதிந்துள்ள முக்கியமான பொருள்.

# ஒரு அன்புத் தர்க்கம்

கிருஷ்ணனை இடது கையில் பிடித்துக் கொண்டு, கம்பை வலது கையில் வைத்தவாறு தாய் யசோதா அவனைத் திட்ட ஆரம்பித்தாள். “நான் உனக்கு இப்போது நன்றாகக் கம்பால் அடி கொடுப்பேன்!” என்று பயமுறுத்தினாள். மேலும், “நீ ஒவ்வொரு வீடாகப் போய் அவர்கள் வீட்டிலெல்லாம் திருடுவதும் எனக்கு நன்றாகத் தெரியும். நீ ஒரு திருடன் (சௌரா) என்று குற்றமும் சாட்டினாள்.

தன்னைத் திருடன் என்று குற்றம் சாட்டியதைக் கேட்டதும் உடனே கிருஷ்ணன் பதிலாக, “ஓ அம்மா, நீ என்னை ஏன் திருடன் என்று சொல்லுகிறாய்? என் பரம்பரையிலோ, அப்பா நந்தபாபாவின் குடும்பத்திலோ திருடர்கள் யாருமே கிடையாது. அப்படியானால் உன் குடும்ப வாரிசில் தான் திருடர்கள் இருந்திருப்பார்கள்!” என்று விடுக்கென்று தன் அழகான குண்டுக் கன்னங்கள் மிளிர பதில் கூறினான்.

முன்பொரு சமயம் தன் அம்மா யசோதாவும் அப்பா நந்த கோபாலரும் பேசிக் கொண்டிருக்கும் போது யசோதாவின் குடும்ப வாரிசில் “சௌர கோஷ்” என்று ஒரு தாத்தா இருந்ததாகச் சொல்லக் கேட்டிருக்கிறான். சௌர என்றால் வட நாட்டில் திருடன் என்று பொருள். அதனால் தான் அவன், “என் வாரிசில் சௌர யாருமே கிடையாது. உன் வாரிசில் தான் உண்டு” என்று கூறினான்.

“அம்மா, நீ ஏன் என்னைத் துரத்தினாய்?” கள்ளம் கபடமில்லாதவனைப் போல் மெதுவாகக் கேட்டான் தாயாரிடம். “நான் என்ன தவறு செய்தேன்?”

“தயிர்ப் பானை எப்படி உடைந்தது?”

“அது பரம இறைவனின் தண்டனை!” கிருஷ்ணன் வெடுக்கென பதிலளித்தான்.

“யார் குரங்குகளுக்கு வெண்ணெய் விநியோகம் செய்தது?”

“யார் அந்தக் குரங்குகளைப் படைத்தானோ, அவன் அவற்றிற்குக் கொடுக்கிறான்”

கிருஷ்ணனின் சாமார்த்தியமான பதில்களைக் கேட்டு யசோதா ஒரு பக்கம் கோபம் அடைந்தாள். ஆனால் கிருஷ்ணனின் பதில்களைக் கேட்டு அவளால் சிரிக்காமலும் இருக்க முடியவில்லை. அவள் கிருஷ்ணனை மிரட்டினாள். “இப்போது நீ உண்மையைச் சொல். தயிர்ப் பானையை உடைத்தது யார்?”

கிருஷ்ணன் இப்போது நடந்ததை விவரிக்க ஆரம்பித்தான். “ஓ அம்மா! நீ அடுப்பிலிருந்து பொங்கிய பாலை அமர்த்த ஓடினாய் அல்லவா. அப்போது நீ அவசரமாக ஓடியதால் நீ காலில் அணிந்திருந்த மணி அந்தப் பானையில் பட்டு அது உடைந்து விட்டது. நான் எதுவுமே செய்யவில்லை அம்மா!”

“அதுவா உண்மை? அப்படியொன்றால் ஏன் உன் வாயெல்லாம் வெண்ணெயாக உள்ளது?”

தயக்கம் எதுமின்றி கிருஷ்ணரிடமிருந்து அதற்கும் பதில் உடனே வந்தது: “ஓ அம்மா உனக்கு இதெல்லாம் தெரியாது! தினமும் ஒரு குரங்கு அங்கே வந்து அதன் கையை வெண்ணெய் பானையில் இட்டு வெண்ணெயை எடுத்து சாப்பிடும். இன்று நான் அதைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டேன். உடனே அது தன் கையை பானையிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தது. அப்போது அது என் முகத்திலெல்லாம்

வெண்ணெயைத் தேய்த்துக் கொண்டு ஓடி விட்டது! நீ நியாயத்தைச் சொல் அம்மா. இதற்கு ஏன் என்னை போய்க் குற்றம் சாட்டுகிறாய்? மேலும் என்னைத் திருடன் என்று கூறி அடிக்க வேறு வருகிறாய்!”

யசோதா கிருஷ்ணனைப் புரிந்து கொண்டாள். “நீ ஒரு முழுப் பொய்யன்.” என்று கூறினாள்.

## கிருஷ்ணனை அன்பினால் கட்டுதல்

யசோதாவின் மனம் பலவிதங்களில் சிந்தனை செய்தது. “நான் இவனை என்ன செய்ய? என் மகன் அமைதியற்று இருக்கிறான். இப்படியே இவனை விட்டு விட்டாலும் எங்கேயாவது ஓடி விடுவான். அது மட்டுமல்லாமல் அவன் செய்த குறும்புச் செயலுக்குத் தண்டனையும் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் பெரியவனாக ஆகும் போது திருத்த முடியாத திருடனாக ஆகி விடுவான். யசோதா ஒரு முடிவுக்கு வந்தாள். கிருஷ்ணனிடம் அவள், “அந்த உரல் தானே உனக்கு வெண்ணெயைத் திருடுவதற்கு உதவியாயிருந்தது. எனவே உன்னை அந்த உரலில் கட்டிப் போடுவது தான் உனக்குச் சரியான தண்டனை!” என்று கூறினாள்.

ஒரு கயிற்றை எடுத்து கிருஷ்ணனை அந்த உரலுடன் கட்ட ஆரம்பித்தாள். ஆனால் அந்தக் கயிறோ இரண்டு விரல்கள் அகலத்தில் குறை பட்டது. பக்கத்தில் நின்றிருந்த வேலைக்காரனிடம் இன்னொரு கயிற்றைக் கொண்டு வரச் சொன்னாள். இரண்டு கயிறுகளையும் நீளவாறு கட்டினாள். என்னே ஆச்சரியம்! இப்போதும் அந்தக் கயிறு இரண்டு விரல்கள் அளவில் குறைந்திருந்தது. அப்போது கோபியர்களும் வர ஆரம்பித்து விட்டனர். அவர்களும் தங்கள் வீடுகளிலிருந்து கயிறுகளைக் கொண்டு வந்து கொடுத்தனர். எத்தனைக் கயிறுகளைக் கட்டி

எவ்வளவு நீளமாக மாற்றியும், கிருஷ்ணனின் வயிற்றில் கட்டும் போது அது இரண்டு விரல்கள் வீதி அளவில் குறைவாகவே இருந்தது.

இந்த ஆச்சரியத்தைக் கண்ட கோபியர்கள் கைக்கொட்டி ஆரவாரம் செய்து சிரித்தனர். அவர்கள் யசோதாவிடம், “ஓ சகி.. கிருஷ்ணனைக் கயிற்றால் கட்ட உன் தலையில் எழுதியிருக்கவில்லை! அது அவனது விதியல்ல!” என்று கூறி நகைத்தனர். யசோதாவோ, "கிருஷ்ணன் 'என்' மகன். அவன் 'என்' வயிற்றில் பிறந்தவன். என்னால் அவனைக் கட்ட முடியவில்லை என்றால் அது எனக்குக் கேவலம்! என்னால் இவனைக் கட்ட முடியவில்லையென்றால் இனி எப்படி என் சகிகளின் முகத்தில் விழிக்க முடியும்?” என்று உள்ளுக்குள் நினைத்து பொருமினாள்.

காலையிலிருந்தே ஆரம்பித்து மதியம் வரையிலும் யசோதா தன் மகனை உரலில் கட்டுவதில் மும்முரமாக சளைக்காமல் இறங்கியிருந்தாள். ஆனால் எவ்வளவு கயிறுகளை நீளவாறு கட்டியும் கிருஷ்ணனின் வயிற்றில் கட்டும் போது அது இரண்டு விரல் வீதியளவுக்குக் குறைவாகவே நின்றது. இப்போது யசோதா நன்றாகவே களைத்திருந்தாள். அவளது முகம் சிவந்திருந்தது. மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டது. உடல் முழுவதும் வியர்த்தது மட்டுமின்றி, தலையில் அவள் சூடியிருந்த மலர்களெல்லாம் ஒவ்வொன்றாகத் தரையில் விழுந்து கொண்டிருந்தன.

கடைசியில் அவள் தான் வழிபடும் ஸ்ரீமன் நாரயணரிடம் சரணடைந்தாள். “ஓ நாராயணரே! என் இறைவனே! தயவு செய்து என் மகனைக் கயிற்றினால் கட்ட எனக்கு உதவி செய்வீர்” என்று மன்றாடினாள். அப்போது பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணன் தன் தாயார் யசோதா தன்னைக் கட்டுவதற்காகப் படும் பாட்டைக் கண்டு இரங்கி,

தன்னைக் கட்டுப்படவைத்தார். அவரது சக்தியான யோக மாயை செயல் புரிந்தாள். இப்போது யசோதா, தன் தலையில் கட்டியிருந்த சிறு கயிற்றைக் கொண்டே மிகவும் எளிதாக கிருஷ்ணனைக் கட்டி விட்டாள்!

(குறிப்பு: பிரஜாவில் அனைவரும் ஸ்ரீமன் நாராயணனையே பரம இறைவன் என்று எண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு அம்சமே நாராயணர் என்ற உண்மையை யோக மாயா பிரஜா முழுவதிலும் மறைத்து விட்டாள். ஸ்ரீகிருஷ்ணனே பரம இறைவன் என்று பிரஜ வாசிகள் அறிந்தால் பாவ தோஷம் ஆகி இந்த உயர்ந்த ரச லீலைகள் நடக்க முடியாது.)

## சாதன பக்தி

இந்த லீலையில், ஏன் அந்தக் கயிறு எப்போதும் இரண்டு கை விரலளவுக்குக் குறைவாக இருந்தது? அதன் உட்பொருள் என்ன? ஒரு விரல் நமது சொந்த முயற்சியைக் குறிக்கிறது. அதாவது பக்தித் தொண்டில் நம் சிரத்தையைக் குறிக்கிறது. இரண்டாவது விரல் கிருஷ்ணனின் கருணையைக் குறிக்கிறது. கிருஷ்ண சேவையில் நமக்கு எவ்வளவு தூரம் சிரத்தையுள்ளதோ அதைப் பொறுத்து கிருஷ்ணனின் இதயம்; அவரது கருணையால் இளகும். அப்போது தான் அவர் தன் அளவில்லாத கருணையினால் பிரேம பக்தி கொண்டுள்ள பக்தனின் கட்டுக்குள் அகப்பட்டுக் கொள்வார்.

# அத்தியாயம் நான்கு

# பிரேமப் பெரு வெள்ளம்

## யசோதாவின் மனப் போராட்டம்

கிருஷ்ணனை வெளியே உரலில் கட்டிப் போட்டு விட்டு தாய் யசோதா வீட்டினுள் சென்று தன் வீட்டு வேலைகளைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தாள். பாதியில் கடைந்து விட்டிருந்த தயிரைத் தொடர்ந்து கடைய ஆரம்பித்தாள். ஆனால் அவளது மனமோ தயிர்க் கடைதலில் இல்லை. சோகமான முகத்துடன் அவள் கிருஷ்ணனைப் பற்றியே முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குக் குழப்பம் வேறு. "நான் ஏன் என் மகன் கிருஷ்ணனை உரலில் கட்டிப் போட்டேன்? நான் அப்படிச் செய்திருக்க கூடாது.... ஆனால் ஒரு வகையில் நான் செய்தது சரிதானே. நான் அவனை இவ்வாறு தண்டிக்காமல் விட்டால் அவன் திருந்தவே மாட்டான். இன்னும் அதிகமாகத் தான் குறும்புகள் செய்வான்!" ஆனால் திரும்பவும் அவளது மனம் கேட்காமல் தவித்தாள். தான் செய்தது மகா தப்பு என்று எண்ணினாள். "என் பால கிருஷ்ணன் எவ்வளவு இனிமையானவன். அவனது பிஞ்சு உடல் மிகவும் மிருதுவானது. பாவம், எப்படி அவன் இதைக் தாங்கிக் கொள்வான்! நான் அவனுக்கு பெரிய வேதனையையல்லவா கொடுத்து விட்டேன்! இல்லையில்லை... நான் எனக்குத் தான் வேதனையைக் கொடுத்துள்ளேன். என் நெஞ்சில் தான் நிறைய வேதனையைச் சுமத்தியுள்ளேன்;" என்று உருகினாள்.

“இப்போது நான் என்ன செய்வது? கிருஷ்ணனோ கோபமாயிருப்பான். அவனை நான் இப்போது அவிழ்த்து விட்டால் உடனே அவன் பிரஜா முழுவதும் ஓட ஆரம்பித்து விடுவான். என்னால் அவனைக் கட்டுப்படுத்த முடியாது என்று பயமாக உள்ளது. இன்னும் கொஞ்ச நேரம் அவனை இப்படியே விட்டு வைப்பது தான் நல்லது..” இப்படி அவள் ஒருவாறு தனக்குள் சமாதானப் பட்டுக் கொண்டாலும், உண்மையில் அவளது மனம் சமாதானமில்லாமல் கொந்தளித்தது. அவ்வப்போது அவள் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டு கிருஷ்ணன் எப்படியிருக்கிறான் என்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

## எதிர்க் கட்சி

கொஞ்ச நேரத்தில் கிருஷ்ணனின் சக தோழர்கள் கிருஷ்ணனைச் சுற்றினர். கிருஷ்ணனின் நிலையைக் கண்டு அவர்கள் வேடிக்கையாகப் பேசிச் சிரித்தனர். அவர்கள் கைகொட்டி ஓசை எழுப்பி சிரிக்கும் போது கிருஷ்ணனும் அவர்களுடன் சேர்ந்து கை கொட்டிச் சிரித்தான்! அவனது கண்களில் தீட்டப் பட்டிருந்த மை, கண்ணீருடன் கலந்து கன்னங்களின் வழியாக வடிந்து அவனது முன் பாக உடலில் அரை வரைக்கும் வந்திருந்தது. இப்போது அவை உலர்ந்து இருந்தன.

தன் சகாக்களைக் கண்டதும் கிருஷ்ணன் ஒருவாறு மகிழ்ச்சியடைந்தான். தாய் யசோதா செய்தவற்றை அப்படியே மறந்து விட்டான். அவனது தோழர்கள், “இந்தக் கயிற்றை அவிழ்த்து நாம் ஏன் கிருஷ்ணனை விடுவிக்கக் கூடாது?” என்று பேசிக் கொண்டனர்.

இதைக் கேட்ட கிருஷ்ணன் உற்சாகமடைந்தான்.

“ஆமாம்! என் கை உரலின் மறுபக்கம் வரை செல்லாது. நீங்கள் தான் என்னை அவிழ்த்து விட வேண்டும்” என்றான். உடனே அவனது தோழர்கள் ஒவ்வொருவராக வந்து கட்டியிருந்த கயிற்றின் முடிச்சை அவிழ்க்க முயன்றனர். ஆனால் யாராலும் அதை அவிழ்க்க முடியவில்லை! திரும்பத் திரும்ப ஒவ்வொருவரும் தங்கள் பலம் அனைத்தையும் உபயோகித்துப் பார்த்தனர். ஒருவருக்கொருவர் சவால் வேறு விட்டனர், “ஓ, உன்னால் அதை அவிழ்க்க முடியாது. நான் அவிழ்க்கிறேன் பார்” என்று தங்களுக்குள் போட்டிப் போட்டுக் கொண்டு முடிச்சை மற்றவர்களிடமிருந்து பறித்து இழுத்துக் கொண்டு அவிழ்க்க முயன்றனர், இப்படி அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் மாறி மாறிப் போட்டியிட்டனர், ஒவ்வொருவரும் மற்றவரைத் தள்ளியவாறு இந்தப் போட்டி நடந்து கொண்டேயிருந்தது. ஆனால் முடிச்சு மட்டும் அசையவில்லை!

கிருஷ்ணனின் வேடிக்கை நண்பனான மதுமங்கலா இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். “நான் எப்படியும் அந்த முடிச்சை அவிழ்த்தேயாக வேண்டும்“ என்று உறுதி பூண்டான். “நீங்கள் எல்லாம் போலிகள்! உங்களுக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. என்னால் மட்டும் தான் அந்த முடிச்சை அவிழ்க்க முடியும்!” என்று சவால் விட்டுக் கொண்டே வேகமாக வந்து, அங்கிருந்த மற்ற அனைத்து சக தோழர்களையும் விலகும்படிப் பிடித்துக் தூரமாகத் தள்ளினான். முடிச்சைத் தன் கையில் எடுத்துக் கொண்டு தன் பலம் அத்தனையும் சேர்த்து அவிழ்க்க முயன்றான். அந்தோ! அவனாலும் அதை அவிழ்க்க முடியவில்லை! உடனே அனைவரும் கைக்கொட்டிச் சிரித்து ஆரவாரம் எழுப்பினர்

இப்படி இங்கே வேடிக்கை நடந்து கொண்டிருந்த போது அவர்களுக்கு பலதேவனைப் பற்றி ஞாபகம் வந்தது. “இங்கே இப்போது பலதேவன் மட்டும் இருந்திருந்தால் எப்படியும் இதை எளிதாகவே

அவிழ்த்திருப்பான்” என்று அவர்கள் எண்ணினார்கள். கிருஷ்ணனின் சகாக்கள் இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும் போது சொல்லி வைத்தது போல் சிறிது நேரத்தில் தாய் ரோகிணியுடன் பலதேவன் வந்து கொண்டிருந்தான். தன் சக தோழர்கள் அனைவரும் அங்கே வேடிக்கை செய்து கொண்டிருந்ததைக் கண்டதும் அவனால் கோபத்தை அடக்க முடியவில்லை!

பலதேவனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. அளவுக்கு மிஞ்சிய கோபத்தால் அவனது கைகள் நடுங்கின. “இதைச் செய்தவர் யார்? நான் உடனே அவனைத் தண்டிக்க வேண்டும்!” என்று பலதேவன் கடும் கோபத்தில் கேட்டான். அப்போது சுபாலா என்ற நண்பன் பலதேவனின் காதில் மெதுவாக, “ஓ அண்ணா! கோபப்படாதே. யசோதா அம்மா தான் இதைச் செய்தது!” என்று கூறினான்.

“அம்மாவா இதைச் செய்தது? ஓ.. அம்மா இதைச் செய்திருந்தால் என்னால் எதுவுமே செய்ய முடியாது” என்று உடனே பலதேவன் பின் வாங்கினான். “இதற்குப் பின்னால் ஏதாவது காரணம் இருக்கும். காரணம் இல்லாமல் அம்மா இதைச் செய்யமாட்டாள்” என்று நினைத்தான்.

## விமோசனம் அளிக்கத் திட்டம்

இவை இங்கே நடந்து கொண்டிருந்த போது கிருஷ்ணனின் சிந்தனை வேறு ஒன்றைப் பற்றிச் சென்றது. அவனோ எல்லாமறிந்தவன். முந்தைய யுகத்தில் நடந்திருந்த ஒரு விளையாடல் அவனுக்கு ஞாபகம் வந்தது. தனது மிகவும் பிரியமான பக்தரான நாரத முனிவர் நளக்குவேரனையும் மணிக்கிரீவனையும் சபித்து மரங்களாக ஆக்கிய சம்பவம் தான் அது!

குபரேனின் இரண்டு மைந்தர்கள் தான் நளக்குவேரனும் மணிக்கிரீவனும். குபேரன் சிவபெருமானின் மிக நெருங்கிய நண்பன். அதே சமயம் சிவபெருமானோ ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் நெருங்கியவர். எனவே இவர்களெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள். மிகவும் பிரசித்தி பெற்ற நாரத முனிவருக்குக் குபேரன் நெருங்கிய நண்பர்.

ஒரு நாள் நாரதர் குபேரனின் இரண்டு மைந்தர்களும் தேவலோக மங்கைகளுடன் நீராடிக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்த இரு மங்கைகளின் உடல்களிலும் குபேரனின் இரு மைந்தர்களின் உடல்களிலும் ஆடை எதுவுமில்லை. அவர்கள் விதம் விதமான விளையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். நாரத முனிவர் பக்கத்தில் வருவதைக் கண்டதும் அந்த இரு தேவலோக மங்கைகளும் வெட்கத்தால் தலை குனிந்து உடனடியாக பொய்கையிலிருந்து வெளியே வந்து அவசரம் அவசரமாக தங்களுடைய ஆடைகளை அணிந்து கொண்டு நாரத முனிவருக்குத் தங்கள் வணக்கங்களைத் தரையில் விழுந்து அளித்தனர்

ஆனால் அந்த இரு இளம் மைந்தர்களோ, அவர்களுக்கே உரித்தான முரட்டுச் சுபாவத்துடன் ஆணவமும் சேர்ந்திருந்ததால் நராத முனிவருக்கு எந்த விதமான வணக்கமும் செலுத்தவில்லை. மேலும் அளவுக்கு மிஞ்சி மதுபானம் அருந்தியிருந்தனர். நாரத முனிவரையும் அவருக்கு வணக்கங்கள் செலுத்திய மங்கைகளையும் வெட்கமெதுவும் இன்றி வசை பேசினர். “இந்தப் பைத்தியக்காரன் ஏன் இங்கே வந்தான்? இவனுக்குப் புத்தியே கிடையாது! நீங்கள் எல்லோரும் போலிகள். இந்தப் பைத்தியக்காரன் வந்ததால் ஏன் நீங்களும் பொய்கையை விட்டு வெளியேறி விட்டீர்கள்? இவன் இங்கு வந்ததால் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருந்த இன்பம் அப்படியே நாசமாகி விட்டது!” என்று பேசினர்.

இவ்வாறு மகாபெரும் கிருஷ்ண பக்தரான நாரத முனிவரை அவதூறாகப் பேசிக் கொண்டிருந்த நளக்குவேரனுக்கும் மணிக்கிரீவனுக்கும் உடலில் ஆடை எதுவுமில்லை. அவர்கள் தங்கள் வெட்கத்தையும் அறிவையும் இழந்திருந்தனர். அவர்களுக்கு, தன்னை விட மூத்தவர்களுக்கோ, எல்லாம் துறந்த மகா முனிவர்களுக்கோ, எப்படி மரியாதை செலுத்த வேண்டும் என்பது கூட தெரியவில்லை. நாரதரின் கண்களுக்கு அவர்கள் இருவரும் வெறும் மரங்களாகவே தெரிந்தனர். "இந்த இரண்டு பேரும் சிவபெருமானுக்கு மிகவும் நெருங்கியவர்களாகவும் பிரியமுள்ளவர்களாகவும் இருப்பதால் நான் இவர்களுக்குத் தக்க பாடமொன்றைக் கற்பித்துக் கொடுக்க வேண்டும்" என்று எண்ணினார்.

## பலமிக்க போதனைகள்

ஒருவனின் காலில் கடினமான முள்ளொன்று குத்தியிருந்தால் அந்த வலி அவனுக்குத் தான் தெரியும். ஆனால் வலியறியாத இன்னொருவனோ தான் வருத்தப்படாமல் இன்னொருவனுக்கு வலியைக் கொடுக்கலாம். நாமும் அன்றாடம் பார்க்கிறோமே! சிலர் மீனின் தலையை நறுக்கென்று வெட்டி விடுகின்றனர் சிலர் ஆடு, பசு, கன்று முதலிய மிருங்களின் மாமிசத்தை உண்ணவேண்டும் என்ற வெறியால் அவற்றின் கழுத்தைக் கொஞ்சம் கூட ஈவிரக்கமின்றி சதக்கென்று வெட்டுகின்றனர். இவர்கள் தனக்கு இதே போல் இன்னொருவர் வலியைக் கொடுக்கும் போது அது எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்ப்பார்களா? ஒரு வேளை அவர்கள் கேட்டுக் திருந்தலாம். "ஓ நான் இப்படியெல்லாம் மற்ற உயிரினங்கள் வதைக்கக் கூடாது" என்று அவர்கள் உணர வேண்டும். நாம்

இன்னொருவரின் விரலை வெட்டினால் அதன் வினைப் பயன் இந்தப் பிறவியில் வரவில்லையென்றால் இன்னொரு பிறவியில் கண்டிப்பாகத் திரும்பி வந்தே தீரும்.

மாமிசம் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? “நான் இன்று உன்னை உண்கிறேன். பின்னால் என்னை நீ உண்டு கொள்” என்பது தான். மாமிசத்தைக் குறிக்கும் ஆங்கில வார்த்தையான “MEAT” ஐக் கவனிப்போம். இதை ‘ME‘, ‘EAT” என்று இரண்டாகப் பிரிக்கலாம். இதன் அர்த்தம், “நான் இப்போது எதன் மாமிசத்தை உண்கிறேனோ. அது பின்னர் வந்து என்னைச் சாப்பிடட்டும்” என்பதே. நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கண்டிப்பாக ஒரு பிரதி பலன் உண்டு. நீ இன்று இன்னொருவரைத் துன்பப்படுத்தினால் அதே துன்பம் இன்னொரு நாள் உனக்குத் தான் வந்து சேரும். நீ இன்று இன்னொருவரை அடித்தால் நாளை மற்றொருவன் உன்னை அடிப்பான். உணவுக்காக வதை செய்யப்பட்ட ஒவ்வொரு ஜீவனும் இன்னொரு பிறவியில் மனிதனாகத் தோன்றி யார் அதைக் கொன்றார்களோ அவனைக் கொன்று சாப்பிடும். அப்போது இவன், தன்னால் கொல்லப்பட்ட மிருகவடிவில் பிறந்திருப்பான். இது அடிப்படை விதி. போலியான மதங்களின் பெயர்களைக் கூறிக் கொண்டு இந்த விதியிலிருந்து தப்ப இயலாது. எனவே மீன், மாமிசங்களை உண்பதை அடியோடு விட்டேயாக வேண்டும்.

நளக்குவேரனும் மணிக்கிரீவனும் மிகவும் உயர்ந்த குடும்பத்திலுள்ளவர்கள். அவர்கள் மிக அழகு மட்டுமின்றி செல்வச் செழிப்புடன் வளர்ந்திருந்தனர். அது மட்டுமல்ல, மிகவும் உயர்ந்த கலாச்சாரத்துடன் வேண்டிய கல்வி அனைத்தையும் கற்றிருந்தனர். அநேகமாக இப்படி மிகவும் பெருந்த வசதியுடனும் புகழுடனும் வாழ்பவர்களுக்குக் கிருஷ்ண பக்தியிலோ, பஜனை மற்றும் வழிபாடுகளிலோ

விருப்பம் இருக்காது. தங்கள் இதயத்தைக் கிருஷ்ணனின் காலடியில் பக்தியுடன் சமர்ப்பிக்க அவர்களுக்கு ஒரு போதுமே இஷ்டம் இருக்காது. பதிலாக எப்போதும் அவர்கள் பெருமையுடனும் கர்வத்துடனும், “நான் மிகவும் படித்தவன், மிகவும் அழகானவன், நான் நாகரீகமானவன். உயர்ந்த குலத்தில் உள்ளவன். நான்தான் அதிபதி, நான் ஒரு பிராமணன், நான் பெரிய செல்வந்தன்” என்று தான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு எண்ணம் கொள்பவர்களுக்கு கிருஷ்ண பக்தி ஒரு போதும் வராது. அவர்களுக்கு எப்படி கிருஷ்ண பஜனையைக் கேட்க இயலும்?

நளக்குவேரனும் மணிக்கிரீவனும் எந்த ஒரு தாழ்ந்த நிலைக்கு விழுந்திருந்தனர் என்பதை நாரதர் அறிந்து கொண்டார். இவர்களுக்கு எப்படியும் ஒரு பாடம் கற்பித்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்து, “நீங்கள் இரண்டு பேரும் மரங்களைப் போல் உடலில் ஆடை கூட இன்றி பெரியவர்களுக்கு எப்படி மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதையும் அறியாமல் நிற்கிறீர்கள். முட்டாள் தனமாக இருக்கிறீர்கள். எனவே நான் உங்களை இப்போதே மரங்களாக ஆக வேண்டுமென்று சபிக்கிறேன்” என்று சாபம் கொடுத்தார்.

நாரத முனிவரோ மிகவும் சக்தி வாய்ந்தவர். மணிக்கிரீவனும் நளக்குவேரனும் அப்போதே தன்னுள் ஏதோ மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தனர். சீக்கிரத்தில் தாங்கள் இருவருமே மரங்களாக மாறி விட இருப்பதை அறிந்தனர். எவ்வளவு ஆபத்தான நிலையில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து உடனே நாரத முனிவரின் காலில் விழுந்தனர். “ஓ, நாரத முனிவரே, நீவிர் இவ்வளவு சக்தி வாய்ந்தவர் என்பதை நாங்கள் அறியவில்லை. நாங்கள் பெருமையிலும் கர்வத்திலும் மூழ்கியிருந்தோம். பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணர் எங்களுக்கு ஏன் இந்த உடலைக் கொடுத்திருக்கிறார்

என்று இப்போது தான் புரிகிறது! அதை அவருக்குப் பஜனை செய்ய மட்டுமே உபயோகித்து அவரை அடைவதற்குப் பதிலாக நாங்கள் தவறாக, குடியிலும் சிற்றின்பத்திலும் எங்களது புலன்களைத் திருப்திப்படுத்தவுமே உபயோகத்து விட்டோம். தயவு செய்து எங்களிடம் கருணை காட்டும் படி யாசிக்கிறோம். உண்மையிலேயே நாங்கள் மரங்களாக மாறி விடுவோமா?” என்று மன்றாடிக் கேட்டனர்.

அதற்கு நாரத முனிவர், “ஆம், நான் என்ன சாபமிட்டேனோ அது எப்படியும் பலித்தே ஆகும். அதை இனி எவரும் மாற்ற முடியாது. ஆனால் நீங்கள் இருவரும் உங்கள் தவறை உணர்ந்ததால், நான் தண்டனையை சிறிது குறைக்கிறேன். மேலும் நீங்கள் இருவரும் என் நண்பனின் மைந்தர்கள். நீங்கள் எப்படியும் இரண்டு மரங்களாவீர்கள். ஆனால் அது பிருந்தாவனத்தில்! கொஞ்ச காலத்துக்குப் பின், ஸ்ரீ கிருஷ்ணர் அங்கே தோன்றுவார். அப்போது அவர் தன் பால கிருஷ்ண லீலைகளைப் புரியும் போது உங்களை அவர் தொடுவார். அப்போது உங்களுக்கு மேட்சம் மட்டுமின்றி கிடைப்பதற்கு அரிதான கிருஷ்ண பக்தியையும் அளிப்பார்” என்று பதிலளித்தார். இப்போது மெதுவாக இரண்டு பேரும் திருப்பதியடைந்து அமைதியானார்கள்.

## நளக்குவேரனுக்கும் மணிக்கிரீவனுக்கும் மோட்சம்

உரலில் கட்டப்பட்டிருந்த பாலகிருஷ்ணன், நாரத முனிவர் கொடுத்த சாபத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தவாறு, “நான் என் பக்தனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்” என்று உறுதியெடுத்தான். ஒரே ஒரு செயலினால் பற்பல விஷயங்களை முடித்து விட பரம் பொருளான

கிருஷ்ணனுக்கா தெரியாமலிருக்கும்?

நந்தகோபாலருடைய வீட்டுக்கு அப்பால் வாசலைத் தாண்டியதும் இரண்டு பெரிய அர்ஜீன மரங்கள் நின்று கொண்டிருந்தன. கிருஷ்ணன் தன் சக தோழர்களிடம், உரலைப் பிடித்து தள்ளி, வீட்டு எல்லையைத் தாண்டி வெளியே வரும் வரை உருட்டச் சொன்னான். அவர்களும் கிருஷ்ணன் கூறியது போல் உரலை உருட்டி வாயிலை விட்டு எல்லையைத் தாண்டி வெளியே கொண்டு வந்தனர்.

இரண்டு பெரிய அர்ஜீன மரங்களும் மிகவும் பரந்த அளவுக்கு நிழலைக் கொடுத்துக் கொண்டு, ஆயிரக்கணக்கான பறவைகளுக்குத் தன் பரந்த கிளைகளில் இருப்பிடங்களையும் வழங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தன. இடையில் ஒரு சிறு குறுகிய பாதையுடன் அவை இரண்டு பக்கங்களிலும் நின்றன. பால கிருஷ்ணன் மெதுவாக அந்த இரண்டு மரங்களினிடையே இருந்த சிறு குறுகலான பாதை வழியாகத் தவழ்ந்தான். ஆனால் அவன் கட்டப்பட்டிருந்த உரல் அந்தப் பாதையை விடவும் அகலம் கூடுதலாக இருந்தது. எனவே தன் ஆயர்குல சகாக்கள் தள்ளியும் இழுத்துக் கொண்டும் வந்திருந்த உரல் இரு மரங்களுக்கும் இடையில் சிக்கி நின்றது.

உரல் மரங்களைத் தொட்டதால் உரலில் கட்டியிருந்த கயிறு வழியாக அவற்றிற்கு கிருஷ்ணனிடம் இணைப்பு ஏற்பட்டது. அதனால் கிருஷ்ணனிடமிருந்து இரண்டு மரங்களுக்கும் மின்சாரம் பாய்வது போலிருந்தது. அந்த உரலை எவர் தொட்டாலும் இந்த மின்சாரம் பாய்ந்திருக்கும்.

கிருஷ்ணன் இப்போது தொடர்ந்து அந்த இரு அர்ஜீன மரங்களுக்கிடையில் சிக்கிய உரலை மேலும் இழுத்தான். அவ்வளவுதான்! நாரத முனிவரின் கருணையினால் மரங்களாக நின்று கொண்டிருந்த நளக்குவேரனும் மணிக்கிரீவனும் கிருஷ்ணனின் இழுப்பில் சரணடைந்து இருவரும் வேரோடு

பிடுங்கப்பெற்று மிகப் பெரிய சப்தத்துடன் கீழே விழுந்தனர். கிருஷ்ணனின் தோழர்கள் இதுவரை மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டும், இழுத்துக் கொண்டும், வேடிக்கை செய்து கொண்டடுமிருந்தனர். ஆனால் சற்றும் எதிர் பாராமல் அவ்வளவு பெரிய சப்தத்துடன் அந்தப் பெரிய மரங்கள் இரண்டும் விழுந்ததைக் கண்டு அலறி அடித்துக் கொண்டனர்! மேலும் என்ன நடந்தது?

இரண்டு மரங்களும் கீழே விழுந்ததும் அவற்றிலிருந்து இரண்டு அழகான தேவர்கள் தோன்றி கிருஷ்ணனின் முன்னால் வந்து நின்றனர். பால கிருஷ்ணனை அவர்கள் இருவரும் வணங்கினார்கள். கிருஷ்ணன் அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் அளித்தான். மேலும், அந்த இரு தேவர்களும் நிரந்தரமான என்றும் அழியாத கிருஷ்ண லோகத்துக்குச் சென்று அங்கு பக்தியுடன் தன் லீலைகளை என்றும் பாடுவதற்கும் கிருஷ்ணன் அருள் வழங்கினான். இதைக் கேட்டுப் பேரானந்தம் கொண்ட நளக்குவேரனும் மணிக்கிரீவனும் கிருஷ்ணனைச் சுற்றி வலம் வந்து தரிசித்த பின் கிருஷ்ண லோகத்தை நோக்கிச் சென்றனர்.

## யசோதாவின் அதிர்ச்சியும் பயமும்

அவ்வளவு பெரிய இரண்டு அர்ஜீன மரங்களும் சேர்ந்து ஒரே நேரத்தில் விழுந்ததால் அதன் சத்தம் பிரஜா முழுவதையும் உலுக்கியது. அந்தப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டு யசோதா துடித்தேப் போனாள். “எங்கேயிருந்து இந்தச் சப்தம் வருகிறது? ஓ! இது என் கிருஷ்ணன் இருந்த இடத்திலிருந்தல்லவா வருகிறது!” அவளது இதயத்தைப் பெரும் பயம் இடிபோல் தாக்கியது. உடனே அவள் சத்தம் வந்த திசையை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தாள். இதே போல் பிரஜாவிலிருந்த அனைவரும் அங்கு வந்து கூடி

விட்டனர்

அனைவரும் சென்று நடந்த காட்சியை நேரில் கண்ட பின்னர் தான் அவர்களது இதயங்களிலிருந்து பயம் மறைந்தது. ஆபத்து ஒன்றும் நேராததால் தங்கள் அதிர்ஷ்டத்துக்காக நன்றி கூறிக் கொண்டனர். மரங்களோ, ஒன்று கிருஷ்ணனின் இடது பக்கத்திலும் மற்றொன்று கிருஷ்ணனின் வலது பக்கத்திலுமாக விழுந்து கிடந்தன. நடுவில் கிருஷ்ணன் கொஞ்சம் கூட காயம் எதுவுமே படாமல் உடகார்ந்திருந்தான். இருந்தாலும் அவர்களனைவரும் மிகவும் பயப்பட்டார்கள்.

கொஞ்சம் தூரத்திலிருந்து முழு காட்சியையும் யசோதா கண்டாள். “ஓ! அந்த இரண்டு மரங்களும் வேருடன் விழுந்துள்ளன. என் கிருஷ்ணனோ நடுவில் இருக்கிறான்! ஐயோ, அந்த மரங்கள் கிருஷ்ணன் மேல் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?” யசோதாவால் அதற்கு மேல் எதையுமே நினைத்துப் பார்க்க முடியவில்லை. பட்ட மரம் போல் அசையாமல் ஸ்தம்பித்து நின்று விடடாள். உடலில் எந்தவிதமான உணர்வுமின்றி காய்ந்த மரக்கட்டையைப் போல் அப்படியே நின்று விட்டாள். கண்களில் கண்ணீர் கூட வரவில்லை. அதுமட்டுமல்ல, மூச்சைக் கூட விடாமல் அவள் தூண் மாதிரி நின்று கொண்டிருந்தாள்!

## கிருஷ்ணனை நந்தகோபாலர் மீட்டார்

இந்த சம்பவம் நடந்த போது பால கிருஷ்ணனின் தந்தையான நந்தகோபாலர் யமுனா நதியிலுள்ள “பிரம்மாண்ட காட்டா” என்ற இடத்தில் குளித்துக் கொண்டிருந்தார். மரங்கள் விழுந்ததால் கிளம்பிய பயங்கரச் சத்தத்தைக் கேட்டு, 'இது என்ன சத்தம்' என்று அறிய அவசரமாகத் தன் அரண்மனையை நோக்கி ஓடி வந்தார்.

மரங்கள் விழுந்து கிடக்க கிருஷ்ணனோ தன் சக தோழர்களுடன் உற்சாகமாகச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் தன் தந்தை தூரத்தில் வருவதைக் கண்டதும் கிருஷ்ணன் உடனே பலமாக அழ ஆரம்பித்தான். நந்தகோபலர் அங்கே பரந்து விழுந்து கிடந்த மரங்களுக்கிடையில் கிருஷ்ணன் உடலில் கட்டப் பட்டுக் கிடப்பதைக் கண்டதும் வாயடைத்துப் போனார். பொங்கி வந்த கோபத்துடன் கிருஷ்ணனைத் தூக்கிக் கொண்டு, “இதை செய்தது யார்?” என்று கோபத்துடன் கேட்டார்.

அப்போது அங்குள்ள சிறுவர்கள் அனைவரும் நந்தகோபாலரைச் சூழ்ந்து கொண்டு, “பாபா, பாபா! கிருஷ்ணன் அந்த இரண்டு மரங்களையும் தொட்டான். அவ்வளவுதான்! அவை இரண்டும் அப்படியே வேரோடு முறிந்து அவைகளிலிருந்து இரண்டு பேர் வெளிச்சம் போல் தோன்றி, கிருஷ்ணனை வணங்கினார்கள். கிருஷ்ணனும் அவர்களிடம் என்னவோ சொன்னான். அதன் பின் அவர்கள் கிருஷ்ணனைச் சுற்றி வந்து முன்னால் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டு அந்த வடக்குத் திசையாகச் சென்றார்கள்!.” என்று கூறினார்கள்.

நந்தகோபாலரோ அவர்கள் கூறியதைக் கொஞ்சம் கூட நம்பவில்லை. “இந்த சிறுவர்கள் எதுவும் தெரியாத வெறும் அப்பாவிகள்! இவ்வளவு பெரிய மரங்களைக் கிருஷ்ணனால் எப்படிப் பிடுங்க முடியும்? ஒருவேளை இவர்கள் பார்த்த இரண்டு உருவங்களும் கம்ஸன் அனுப்பி வைத்த அரக்கர்களாக இருக்குமோ! கிருஷ்ணனுக்கு இப்படி வருகின்ற ஆபத்துக்களை யசோதா அறியாமல் இருக்கிறாளே” என்று கவலைப் பட்டார். இப்போது தன்னால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று தன் எண்ணங்களில் ஓடியது. “ஒரு வேளை இந்த மரங்கள் கிருஷ்ணனின் மேலே விழுந்து அவன் இறந்திருந்தால்?...” அவரால் அதற்குப் பின் எதையுமே நினைக்க முடியவில்லை.

கிருஷ்ணன் தன் தந்தை நந்தகோபாலரிடம் மெதுவாக. “அம்மா என்னை அடிப்பேன் என்றாள்..” என்று அனுதாபப்படும் வண்ணம் கூறி அழுதான். நந்தகோபாலர் கிருஷ்ணனின் கண்களிலிருந்து வந்திருந்த கண்ணீரைத் தன் போர்வையால் துடைத்து அவனை அமைதிப் படுத்தியவாறு, ”என் மகனே, உன்னை யார் இப்படிக் கட்டி வைத்தார்?” என்று கேட்டார். ஆனால் கிருஷ்ணனோ பதில் கூறாமல் தேம்பித் தேம்பி அழுதான்.

நந்தகோபாலர் திரும்பவும் கேட்டார். “யார் உன்னைக் கட்டிப் போட்டது? என்னிடம் சொல். அது யாராக இருந்தாலும் நான் தண்டிக்கிறேன்.” இவ்வாறு திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே கிருஷ்ணனை உரலில் கட்டியிருந்த முடிச்சை அவிழ்த்து விட்டார்.

கடைசியாக பாலகிருஷ்ணன் தன் செம்பவள வாயைத் தந்தையின் செவியருகில் வைத்து இரகசியமாக. “அம்மா தான் என்னைக் கட்டிப் போட்டாள்!” என்றான்.

தன் மகன் கூறியதைக் கேட்டு நந்தகோபாலர் ஆச்சரியமடைந்தார். “உன் அம்மாவா உன்னை இப்படிக் கட்டி வைத்தாள்? “ஓ! அவள் இப்படி ஒரு கல் நெஞ்சம் உள்ளவள் என்று நான் நினைக்கவேயில்லையே!” கிருஷ்ணனின் கையில் அவர் லட்டு ஒன்றைக் கொடுத்தார். கிருஷ்ணனும் அதைக் கையில் வாங்கிக் கொண்டான். அவன் அதைச் சாப்பிடவில்லை. ஆனால் இப்போது அழுகையை நிறுத்திக் கொஞ்சம் அமைதிப்பட்டிருந்தான். ஆனால் கண்களிலிருந்து கண்ணீர் வருவது இன்னமும் முழுவதுமாக நிற்கவில்லை. கிருஷ்ணன் தன் தாயார் யசோதாவை பீதியுடன் தான் பார்த்தான்.

நந்தகோபாலரும் மிக வருத்தத்தோடு

நின்றிருந்தார். கிருஷ்ணனையும் பலதேவனையும் தன் இரு தோள்களிலும் தூக்கிக் கொண்டார். பலதேவன் வலது தோளிலும், கிருஷ்ணன் இடது தோளிலும் அமர்ந்திருக்க, நந்தகோபாலர் அவர்களை யமுனா நதி தீரத்திலுள்ள "பிரம்மாண்ட காட்டா" என்ற குளிக்கும் இடத்துக்குக் கொண்டு சென்றார். நடந்த துர் சம்பவத்திலிருந்து அவர்களைப் புனிதமாக்க, கிருஷ்ணனையும் பலதேவனையும் நன்றாகக் குளிப்பாட்டி, தானும் குளித்தார். பின், திரும்பவும் கிருஷ்ணனையும் பலதேவனையும் தன் தோள்களில் சுமந்து கொண்டு வீடு வந்தார். அப்போது மதியத்தைத் தாண்டி வெகு நேரம் ஆகியிருந்தது. ஆனால் யசோதாவின் வீட்டில் யாரும் எதுவும் சமைக்கவேயில்லை. அந்த சோக நிலையிலிருப்பவர்கள் யாரால் தான் சமைக்க இயலும்? யசோதாவும் அவளது சகிகளும் அடக்க முடியாத சோகத்தினால் வானத்தை வெறுமனேப் பார்த்துக் கொண்டிருந்தனர். எவருக்கும் சமைப்பது பற்றியோ, சாப்பிடுவது பற்றியோ ஞாபகமே இல்லாமல் போனது!

## மாட்டுத் தொழுவத்தில் போஜனம்

நந்தகோபாலர் இரண்டு குழந்தைகளுடன் வருவதைக் கண்டவுடன் ரோகிணி அம்மா உடனே சமையல் அறைக்குச் சென்று வேகமாக இனிப்பான கஞ்சியைச் சமைத்து, அதை நந்தகோபாலரிடம் கொடுத்தாள். அவர் அதை முதலில் பலதேவனுக்கும் பின் கிருஷ்ணனுக்கும் சாப்பிடக் கொடுத்தார். அவர்கள் இருவரும் திருப்தியடைய சாப்பிட்ட பின், தானும் கொஞ்சம் சாப்பிட்டார். அவர் முகத்திலோ கவலை இன்னமும் குடி கொண்டிருந்தது. இருந்தாலும் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு வீட்டின் வெளிப்புறம் சென்றார்.

இந்தியாவில் குறிப்பாக வசதி பெற்றவர்களின் வீடுகளில் இரண்டு பாகங்கள் இருக்கும். வீட்டின் உட்பாகம் வீட்டிலுள்ள பெண்மணிகளுக்கு ஒதுக்கப்பட்டு, அங்கே அறைகளும் மற்றும் அவர்களுக்கு வசிக்கவும், வீட்டு வேலைகள் செய்ய வசதியான அறைகளும் இருக்கும். வெளிப்பாகத்தில் ஆண்கள் வசிப்பதற்காக தாழ்வாரம் மற்றும் வராண்டா, விருந்தினர் அமரும் இடம் இப்படியான அறைகள் இருக்கும். மேலும், வீட்டின் முன்பாகத்தில், குரங்குகளின் தொந்தரவு இல்லாமல் துணிகளைக் காயப்போடும் இடமும் இருக்கும். வீட்டின் இந்த வெளிப் புறத்துக்கு நந்தகோபாலர் சென்றார்.

சாயங்கால வேளையும் தாண்டி. இப்போது இரவு போஜனத்துக்கும் கூட நேரமாகி விட்டது. இருப்பினும் வீட்டில் இரவுப் போஜனத்திற்கு யாரும் எதுவுமே சமைக்கவில்லை. எனவே நந்தகோபாலர் கிருஷ்ணனையும் பலதேவனையும் கூட்டிக் கொண்டு மாட்டுத் தொழுவத்துக்குத் சென்றார். அங்கே, பசுவின் மடுவுகளிலிருந்து பாலை நேராக அவர்களது வாய்களிலேயே கறந்து விட்டார். பின்னர் அவர்களுக்குக் கொஞ்சம் வெல்லத்தையும் (சர்க்கரை) சாப்பிடக் கொடுத்தார். பலதேவனுக்கும் கிருஷ்ணனுக்கும் வயிறு நிறைந்தவுடன் அவர்களை வீட்டினுள் கூட்டிக் கொண்டு சென்றார். அப்போது நன்றாகவே இருட்டி விட்டது.

## கிருஷ்ணனை யசோதாவிடம் சேர்த்தல்

இப்போது யசோதாவின் தோழிகள் - குறிப்பாக ரோகிணியும் உபநந்தரின் மனைவியும் - மிகவும் கவலையடைந்திருந்தனர் வயதில் மூத்த கோபியர்களும், ரோகிணியும், நந்தகோபாலரின் மடியில் உட்கார்ந்திருந்த பலதேவனையும் கிருஷ்ணனையும் நெருங்கினர்.

வயதான கோபியர்கள் பலதேவனைப் பார்த்து, “நீ கிருஷ்ணனை விடவும் மூத்தவன். மற்றும் பலமானவன். நீ சென்னால் கிருஷ்ணன் கேட்பான். கிருஷ்ணனை நீ அழைத்துக் கொண்டு நேராக யசோதாவின் மடியில் கொண்டு உட்கார வை” என்றார்கள். இதைக் கேட்ட பலதேவன் உடனே எழுந்து சென்று கிருஷ்ணனை இழுத்தான். ஆனால் கிருஷ்ணனோ பலதேவனைப் பலமாகத் தடுத்துத் தள்ளியதால் பலதேவன் பொத்தென்று கீழே விழுந்தான். தன் தந்தையின் கழுத்தில் தனது இரண்டு கரங்களையும் சேர்த்து அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

ரோகிணி நந்தகோபாலரிடம் “ஓ நந்த மகாராஜா! கிருஷ்ணனின் தாய் இதுவரையில் சாப்பிடவேயில்லை. ஒரு மூலையில் கல்லைப் போல் உட்கார்ந்திருக்கிறாள். அது மட்டுமல்ல, எல்லா கோபியர்களும் கவலையால் ஒன்றுமே சாப்பிடாமலும் தண்ணீர் கூட அருந்தாமலும் இருக்கின்றனர்” என்று கூறினாள்.

“நான் என்ன செய்ய முடியும்?”, நந்தகோபாலர் ஆழ்ந்து பதிலளித்தார். “நடந்தது அனைத்தும் அவளது கோபத்தினால் வந்த விளைவு தான் என்பதை அவள் உணரட்டும். அவள் நெஞ்சிரக்கமின்றி இதை செய்திருக்கிறாள்!” என்று யசோதாவின் மேல் கோபப்பட்டார்.

வயதான கோபியர்கள். நந்தகோபாலர் கூறியதைக் கேட்டதும் கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் வழிய, “ஐயகோ! யசோதாவை இரக்கமற்றவள் என்று தயவு செய்து கூறாதீர்கள். அப்படிப்பட்ட வார்த்தைகளை அவள் மேல் கூறவே கூறாதீர்கள். அவள் உள்ளும் வெளியும் எவ்வளவு மிருதுவானவள்!”

இதைக் கேட்ட நந்த மகாராஜா சிறிது மனம் நெகிழ்ந்து. கிருஷ்ணனை நோக்கி. “மகனே, நீ அம்மாவிடம் போவாயா?” என்று கேட்டார்.

“மாட்டேன், மாட்டேன் நான் உங்களிடம் தான் இருப்பேன்”, கிருஷ்ணன் அழுத்தமாகப் பதிலளித்தான்: “நான் அப்பாவிடம் தான் இருப்பேன்!”

ரோகிணி அம்மா இப்போது கிருஷ்ணன் பக்கத்தில் வந்தாள். “கிருஷ்ணா, நீ இரவு எங்கே தங்கப் போகிறாய்? எங்கே தூங்குவாய்?” என்று கேட்டாள்.

“நான் அப்பாவிடம் தூங்குவேன்“

“அம்மாவிடம் தூங்கவில்லை?”

“மாட்டேன்“

இப்போது உபநந்தரின் மனைவி கிருஷ்ணனிடம். “நீ உன் அப்பாவிடம் தங்கலாம். ஆனால் இனி என்ன சாப்பிடுவாய்? யார் உனக்குப் பாலூட்டுவார்?” என்று கேட்டாள்.

“நான் பசுவின் மடுவிலிருந்து நேராகப் பாலை அருந்துவேன், அப்பா எனக்கு அப்படிக் கொடுப்பார்கள். எனக்குச் சர்க்கரையும் கூட கொடுப்பார்கள்!” என்றான்.

“யார் உன்னிடம் விளையாடுவார்?”

“நான் என் அண்ணன் பலதேவனுடனும், அப்பாவுடனும் விளையாடுவேன்”

“நீ உன் அம்மாவிடம் போகவே மாட்டாயா?”

“மாட்டேன்! கண்டிப்பாகப் போக மாட்டேன்!”

உடனே நந்தகோபாலர் கேட்டார், “அப்படியானால், ஏன் நீ ரோகிணி அம்மாவிடம் போகக் கூடாது?”

கிருஷ்ணன் இப்போது விம்மி அழுது கொண்டே கோபத்துடன், “நான் என் (மூத்த) அம்மாவைக் கூப்பிட்டு என்னை அவிழ்த்து விடக் கெஞ்சினேன். அவர்கள் வரவில்லை!”

இதை கேட்ட ரோகிணியின் கண்கள் உடனே குளமாயின. கண்ணீர் முகத்தில் பாய்ந்து கொண்டிருக்க அவள், “மகனே! இப்படி இரக்கமில்லாமல் போகாதே, உன் அம்மா உனக்காகக் கதறி அழுது கொண்டிருக்கிறாள்!” என்றாள்.

இதைக் கேட்ட கிருஷ்ணனின் கண்களில் இப்போது கண்ணீர் பொங்கியது, திரும்பித் தன் அப்பாவின் முகத்தையும் பார்த்தான். அப்பாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் தரையாக விழுந்து கொண்டிருந்தது.

நந்தகோபாலர் கிருஷ்ணனிடம், “மகனே, நான் உன் அம்மாவை அடிக்கவா?” என்று கூறியவாறு தன் கையை யாரையோ அடிப்பது போல் சைகை செய்தார். அதைக் கண்ட கிருஷ்ணன் உடனே அப்பாவின் கையைப் பலமாக இறுக்கிப் பிடித்து கொண்டான். அப்போது யசோதாவின் இதயத்திலிருந்த வேதனை நன்கு அவருக்கு புரிந்தது.

ரோகிணி கிருஷ்ணனிடம், தன் விரல்களைத் தலையின் மேல் சுண்டியவாறு “ஒரு வேளை உன் அம்மா அப்படியேப் போய் விட்டால்?” என்று கேட்டார். அதற்கு அர்த்தம், “உன் அம்மா ஒரு வேளை இறந்து போய் விட்டால்?..”

அவ்வளவுதான்! கிருஷ்ணனால் இதைக்

கேட்கப் பொறுக்கவில்லை! ஒவென்று சத்தமாக அழுது கொண்டே நந்தகோபாலரின் மடியிலிருந்து குதித்து எழுந்து தாயார் யசோதாவை நோக்கி தன் இரு கைகளையும் நீட்டிக் கொண்டு மடியில் போய் உட்கார வேகமாக ஓடினான்.

இதைக் கண்ட ரோகிணியும் அழுகையை அடக்க முடியாமல், அழுது கொண்டு ஓடும் கிருஷ்ணனைத் தூக்கிக் கொண்டு, வீட்டின் உட்புறத்தில் கல் போல் உட்கார்ந்திருந்த யசோதாவின் மடியில் கொண்டு போய் இருத்தினாள்!

இதுவரையில் யசோதா உயிரற்றவள் போல் உணர்வு எதுவுமின்றி உட்கார்ந்திருந்தாள். ஆனால் ரோகிணி தன் மகனைக் கொண்டு தன் மடியில் இருத்தியதும் திரும்பவும் உயிர் வந்தது போல் துடித்து தன் சுய உணர்வுக்கு வந்தாள்.

“என் அருமை மகனே!” என்று கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்தாள். தன் உடல் நடுங்க, நெஞ்சம் இளகிப் பாய தன்னுடைய முந்தானையைக் கிருஷ்ணனின் மேல் போர்த்திக் கொண்டு குராரிப் பறவையைப் போல் தேம்பித் தேம்பி அழுதாள்.

கிருஷ்ணனும் அழுதுகொண்டே, தாய் யசோதாவை அமைதிப்படுத்த முயன்றான். “அம்மா! அம்மா!” என்றான். இப்போது ரோகிணி மற்றும் அனைத்துக் கோபியர்களும் அங்கே சுற்றி வந்து விட்டனர். அவர்களும் யசோதாவுடன் சேர்ந்து சத்தமாக அழ ஆரம்பித்தார்கள்.

யசோதா அழுது கொண்டிருந்தாள். கிருஷ்ணன் அழுது கொண்டிருந்தான். ரோகிணி அழுது கொண்டிருந்தாள், கோகுலத்திலுள்ள அனைத்துக் கோபியர்களும் அழுது கொண்டிருந்தனர்! அதுமட்டுமல்ல, வெளிப்புறத்தில் நந்தகோபாலரும் அழுது கொண்டிருந்தார்! எல்லோரும் அழுது

கொண்டிருந்தனர்! தாய் பாசம், சேய் பாசம் அனைத்து விதமான வாத்ஸல்ய பாவங்களும் அங்கே பெரும் வெள்ளமாக பெருக் கெடுத்து ஓடின!

சற்று நேரத்திற்குப் பின் யசோதா அமைதிப்பட்டாள். கிருஷ்ணனுக்குத் தன் மார்பகத்திலிருந்து பாலூட்டினாள். அதற்குள் கொஞ்சம் ஆகாரங்களும் சமைக்கப்பட்டன. நந்தகோபாலரை பிரசாதம் உண்ண அழைத்தார்கள். அவர் பலதேவனை தன் வலது பக்கத்திலும், கிருஷ்ணனைத் தன் இடது பக்கத்திலும் இருத்திக் கொண்டு, “கிருஷ்ணா, நீ போய் அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு வா. அவள் வரவில்லையானால் நான் எதையுமே உண்ண மாட்டேன்” என்று கூறினார்.

யசோதாவோ வெட்கமும் குழப்பமும் சேர்ந்து கொண்டதால் அங்கே வரத் தயங்கினாள். ஆனால் கிருஷ்ணன் ஓடிப் போய் தாயாரின் முந்தானையைப் பிடித்து இழுத்தான். யசோதாவினால் இப்போது மறுக்க முடியவில்லை. கிருஷ்ணன் யசோதாவை இழுத்துக் கொண்டு நந்தகோபாலரின் முன் கொண்டு நிறுத்தினான்

நந்தகோபாலர் தானும் புசித்துக் கொண்டு, பலதேவனுக்கும் கிருஷ்ணனுக்கும் கொடுத்துப் பின்னர் மீதி அனைத்தையும் வீட்டிலிருந்த அனைவருக்கும் விநியோகம் செய்தார். இப்போது கிருஷ்ணன் யசோதாவின் மடியிலேயே உட்கார்ந்திருந்தான். அன்று இரவு தன் தாயாருடன் வழக்கம் போல் அமைதியாக உறங்கினான்.

பரம் இறைவனான ஸ்ரீ கிருஷ்ணர் எத்தனை எத்தனையோ தேனினும் இனிய லீலைகளை நடத்துகிறார். ஏன்? தன்னிடம் உண்மையான அன்பு வைத்திருக்கும் பக்தர்களைக் கவர்ந்து அவர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்துவதற்காகத் தான்!

ஸ்ரீ கிருஷ்ணனைத் தாய் யசோதா கட்டிய அதே உரலின் மிஞ்சியுள்ள பாகத்தை இன்றும் நாம் கோகுலத்திலுள்ள மகா வனத்தில் காணலாம். (முன் அட்டையின் உட்புறம் பாருங்கள்).

# அத்தியாயம் ஐந்து

## பேர் மகிமை பெற்ற பழக்காரி

### நந்த குமாரனிடம் கவர்ச்சி

பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் தனது அற்புத லீலைகளை நிகழ்த்திக் கொண்டிருந்த அதே சமயத்தில் பக்கத்து நகரமான வட மதுராபுரியில் சுவையான பழங்கள் விற்கும் ஒரு வயதான ஏழைப் பெண் தனியாக வாழ்ந்து வந்தாள். அவள் தன் பழக் கூடையில் சுவையான பழுத்த பழங்களைத் தலையில் சுமந்து கொண்டு ஒவ்வொரு சந்து தெருக்களெல்லாம் கால் நடையாகச் சென்று, “மாம்பழம், ஆரஞ்சு பழம், வாழைப்பழம், கொய்யாப்பழம்!” என்று கூவி விற்பனை செய்வாள். ஆங்காங்கு உள்ள குழந்தைகள் எல்லாம் அவள் வைத்திருக்கும் பழங்களைக் கண்டதும் அவளிடம் ஓடி வந்து, தங்கள் மழலை பேசும் வாயால் “அம்மா அம்மா, எனக்குப் பழம் வேண்டும்!” என்று ஆவலுடன் கேட்பார்கள்.

சிறு குழந்தைகளிடம் அவள் மிகவும் பிரியப் பட்டவளாக இருந்தாள். பழங்கள் விற்பதில் வரும் மிகவும் சொற்ப வருமானத்தில் அவள் தன் வாழ் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் அவள் நந்த குமாரனான ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிக் கேள்விப் பட்டாள். யாரோ ஒருவர் அவளிடம், “யசோதா தேவிக்கு மிக அழகான பையன் ஒருவன் பிறந்துள்ளான். அவனது பெயர் கிருஷ்ணன். அவனை யாராவது ஒரே ஒரு முறை பார்த்தால் போதும், பின் அவர்கள் தன் மனத்தை ஒரு

போதும் தங்கள் சுயநிலைக்குக் கொண்டு வரவே முடியாது! அவ்வளவு அழகானவன் கிருஷ்ணன்!” என்று கூறியிருந்தனர். இதைக் கேட்ட அந்த பழக்காரிக்குக் கிருஷ்ணனை ஒரு முறையாவது பார்த்து விட வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை உண்டானது.

## ஓ கிருஷ்ணா! ஓ கிருஷ்ணா!

மதுராபுரியிலிருந்து கோகுலத்துக்குச் செல்ல வேண்டுமானால் யமுனா நதியைக் கடந்து பின் சுமார் ஏழு மைல்கள் நடந்து செல்ல வேண்டும். ஒரு நாள் அவளது அடக்க வொண்ணாத ஆசையில் மிகவும் சிரமப்பட்டு வாழை மரத் தண்டுகளாலும் கம்புகளாலும் கட்டப்பட்ட ஒரு தெப்பத்தில் ஏறி யமுனா நதியைக் கடந்தாள். பின்னர் கால் நடையாக நடந்து கோகுலத்தை அடைந்தாள். வழக்கம் போல் பழங்களை விற்பதற்காக அவள் கூவினாள். ஆனால் அவளது முழுச் சிந்தனையும் கிருஷ்ணனிடமிருந்ததால், “பழம் வேண்டுமோ பழம்! வாழைப்பழம், மாம்பழம், ஆரஞ்சுபழம், கொய்யாப்பழம்!” என்று கூவுவதற்குப் பதிலாக,

*“கோவிந்த தாமோதர மாதவேத்தி!*
*கோவிந்த தாமோதர மாதவேத்தி!”*

என்று உரக்கக் கூவிக் கொண்டே சென்றாள். அவளது முழு இதயமும், “கோவிந்தா! தாமோதரா!” என்று கதறிக் கதறி அழுதது. அன்று முழுவதும் அவள் நந்த கிராமத்தைச் சுற்றி சுற்றி வந்தாள். ஆனால் கிருஷ்ணன் வெளியில் வரவேயில்லை! கவலையுடன் வீடு திரும்பினாள். ஆனால் அடுத்த நாள், மறுநாள் என்று தினமும் அங்கு வந்து கொண்டிருந்தாள். எத்தனை தடவைகள் நந்த கிராமத்தைச் சுற்றியும், கிருஷ்ணனை அவளால் பார்க்கவே முடியவில்லை! அவள் தாழ்ந்த குலத்தில் உள்ளவள் ஆதலால், நந்த

மகாராஜாவின் முற்றத்துக்குக் கூட அவளால் செல்ல முடியாமல், சுற்றி சுற்றி மட்டுமே வர முடிந்தது.

## பழக்காரியின் சபதம்

மூன்று நாட்களும் அவளால் கிருஷ்ணனைப் பார்க்க இயலாமல் போனதில் மிகவும் வருத்தம் கொண்டாள். கிருஷ்ணனைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அவளது இதயத்தில் அடக்க முடியாமல் உருவெடுத்தது. நான்காவது நாள் அவள் சபதம் எடுத்தாள், "இன்று நான் கிருஷ்ணனைப் பார்க்க முடியவில்லை என்றால், நான் திரும்பிப் போகவே மாட்டேன்! நான் இங்கேயே என் உயிரை விட்டு விடுவேன்!" என்ற சபதத்துடன் அவள் மெய்ம்மறந்து பாடினாள், "கோவிந்தா! தாமோதரா! மாதவா!" இப்போது கிருஷ்ணனால் தன்னைக் கட்டுபடுத்த இயலவில்லை. தாய் யசோதாவின் மடியிலிருந்து குதித்து எழுந்தான். தன் உடலில் ஆடையில்லை என்பதையும் கூட மறந்து, அந்தப் பழக்காரியை நோக்கி ஓட ஆயத்தமானான்!

கிருஷ்ணன், அங்கே பெரியவர்கள் பண்டமாற்று முறையில் பொருள்களை வாங்குவதைப் பார்த்திருந்தான். பழ வியாபாரிகளிடம் தானியங்களைக் கொடுத்துப் பழங்கள் வாங்குவது உடனே ஞாபகத்தில் வந்தது. பக்கத்திலிருந்த ஒரு தானிய மூட்டை அவனது கண்ணில் பட்டது. அவனது பிஞ்சுக் கரங்களால் கை நிறையத் தானியங்களை வாரிக் கொண்டு, "ஓ எனக்கு கொஞ்சம் பழங்கள் வேண்டும், எனக்கு பழங்கள் கொடு" என்று கூவிக்கொண்டு வீட்டு முற்றம் வழியாக வெளியே ஓடி வந்தான்.

அந்தப் பழக்காரி தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவளாதலால் அவளால் யசோதாவின் வீட்டு

முற்றத்துக்குக் கூட வர இயலவில்லை. வீட்டின் வெளிப்பக்க மதில் கதவிற்கு வெளியில் உட்கார்ந்திருந்தாள். கிருஷ்ணன் தன் கை நிறைய தானியங்களுடன் வெளிக் கதவை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் ஓடி வர வர, அவனது பிஞ்சுக் கரங்களிலிருந்து தானியங்கள் வெளியே விழுந்து கொண்டேயிருந்தன. வெளி மதில் கதவை அவன் தாண்டும் போது கையில் ஒரு சிறு தானியம் கூட சிக்கவில்லை! ஆனால் கிருஷ்ணனோ, தன் கையில் பெருமளவு தானியங்கள் இருக்கிறது என்று எண்ணி, நிறைய பழங்கள் கிடைக்கும் என்று ஆவலுடன் ஓடிவந்தான்!

பழக்காரி கிருஷ்ணனை இப்போது பார்த்து விட்டாள்! அவ்வளவு தான்! அவனது கொள்ளை கொள்ளும் அழகில் இவ்வளவு நாளாக துடித்துக் கொண்டிருந்த அவளது இதயத்தை அப்படியே பறி கொடுத்து விட்டாள்!

“எனக்குப் பழங்கள் கொடு! எனக்குப் பழங்கள் கொடு” கிருஷ்ணன் தன் மழலையில் அவளிடம் கேட்டான்.

“நீ எனக்குக் கொடுக்க என்ன கொண்டு வந்திருக்கிறாய்?” என்று பழக்காரி கேட்டாள்.

“நான் நிறையத் தானியங்கள் கொண்டு வந்திருக்கிறேன்”

பழக்காரி சிரித்தாள், “ஓ குழந்தாய்! உன் கையில் ஒரு தானியம் கூட இல்லை!”

இப்போது தான் கிருஷ்ணன் தன் கைகளைப் பார்த்தான். அதில் ஒரு சிறு தானியம் கூட இல்லை! ஆனால் 'பழங்கள் எப்படியும் வேண்டும்' என்று தனது பார்வையால் பழக்காரியிடம் கேட்டான்.

பழக்காரி கிருஷ்ணனின் முகத்தைப் பார்த்துக்

கொண்டே, பரவசத்தால் மூழ்கப்பட்டு, “நீ என் மடியில் உட்கார்ந்து கொண்டு என்னை ‘அம்மா’ என்று ஒரே ஒரு முறை கூப்பிடு. நான் உனக்கு என்னென்ன பழங்கள் வேண்டுமோ எல்லாம் கொடுப்பேன்” என்றாள்.

கிருஷ்ணன் சிறிது யோசித்தான். மேலும், கீழும் சுற்றிலும் அங்குமிங்கும் பார்த்தான். யாராவது இதைப் பார்க்கிறார்களா என்று கவனமாகப் பக்கமெல்லாம் நோட்டமிட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் தன் பக்தை எந்த குலத்தைச் சார்ந்தவள் என்றா நினைப்பான்? ஒரு போதும் இல்லை! ஆனால் இங்கே அவன் பிரஜாவின் இளவரசனாக அல்லவா லீலை செய்கிறான்! “ஒரு வேளை நான் இந்தப் பழக்காரியின் மடியில் உட்கார்ந்தால் என் அம்மா என்ன நினைப்பாள்? மேலும், ஒரு வேளை என் சக நண்பர்கள் இதைப் பார்த்து விட்டால் என்ன சொல்லுவார்கள்,” என்று சிந்தித்தான். அதனால் அவன் வேறு யாராவது இதைக் கவனிக்கிறார்களா என்று இங்கும் அங்குமாகச் சுற்றிலும் பார்த்தான்.

தற்போது யாரும் அவனைப் பார்க்கவில்லை என்பதை உணா;ந்ததும் வேகமாகக் குதித்து பழக்காரியின் மடியில் உடகார்ந்து, “அம்மா” என்று அழைத்தான். ஆனால் அதே வேகத்தில் அவளது மடியிலிருந்து குதித்து எழுந்து கொண்டு "இப்போது எனக்குப் பழம் கொடு” என்று கேட்டான்.

கிருஷ்ணன் தன் மிகப் பெரிய ஆசையை நிறைவேற்றியதில் அந்தப் பழக்காரி பரவசம் அடைந்தாள். அவளிடமிருந்த எல்லாப் பழங்களையும் கிருஷ்ணனுக்குக் கொடுத்து விட ஆசைப்பட்டாள். ஆனால் கிருஷ்ணனின் பிஞ்சுக் கரங்களோ மிகவும் சிறியதாக இருந்ததால் அவனால் இரண்டு மாம்பழங்களையும் ஒரு வாழைப்பழத்தையும் மட்டுமே கையில் கொள்ள முடிந்தது. அவற்றை அவன் தன் மார்போடு சேர்த்து இரு கைகளால் அணைத்துப்

பிடித்துக் கொண்டு, சிறு குழந்தைகள் விளையாட்டாக அசைந்து நடப்பதைப் போல் நளினமாக ஆடிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். அவனது அந்த நளின நடையைப் பார்க்கவே ஆயிரம் கண்கள் வேண்டும்!

கிருஷ்ணன் தன் அம்மாவிடம் சென்று பழங்களை அவளது முந்தானை மடியில் கொட்டினான். தாய் யசோதா அவற்றை அவளுடைய தோழிகள் அனைவருக்கும் வினியோகம் செய்தாள். ஆனால் என்னே ஆச்சரியம்! கொடுக்க கொடுக்க அவை குறையாமலே இருந்தன. அங்கே வந்திருந்த எல்லாக் கோபியர்களுக்கும் கூட பழங்கள் அளித்த பின்பும் பழங்கள் இன்னமும் மீதி இருந்தன! இதைக் கண்ட யசோதாவிற்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அளவு கடந்து போயின.

இப்போது அந்தப் பழக்காரியின் நிலை என்ன? கிருஷ்ணன் அவள் மடியில் அமர்ந்து, “அம்மா” என்று அழைத்த போது அவள் சொல்ல வொண்ணா பரவசத்தை அடைந்தாள். தன்னை முழுவதுமாக - இதயம், மனம் அனைத்தையும் - கிருஷ்ணனிடம் அப்படியே பறி கொடுத்து விட்டாள்!

அவள் தான் இருந்த இடத்தில் அப்படியே கற்சிலை போல் அசைவின்றி உட்கார்ந்திருந்தாள். நடந்ததை அவளால் நம்பவே முடியவில்லை! அவள் சுய நினைவை இழந்து இவ்வாறு அசையாமல் வெகு நேரமாக உட்கார்ந்திருந்ததால் பக்கத்தில் உள்ளவர்கள். “ஏன் நீ இங்கே இப்படி கல் போல் வெகு நேரமாக உட்கார்ந்திருக்கிறாய்” என்று கேட்டனர் ஆனால் அவள் பதிலளிக்கவேயில்லை. ஏன்? அவளால் பதில் பேசவே இயலவில்லை!

# கூடை முழுவதும் மாணிக்கங்கள் வைடூரியங்கள்!

எவ்வளவு நேரம் அவள் இப்படி உட்கார்ந்திருந்தாளோ, இப்போது சாயங்காலம் ஆகி விட்டது. தன் கூடையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். நடந்து யமுனா நதிப்பக்கம் வந்தாள். யமுனா நதியைத் தாண்டித்தான் மதுராவுக்குச் செல்ல முடியும். ஆனால் அவளது கூடை இப்போது சுமக்க முடியாத அளவு கனமாக இருந்தது. அவளுக்கு ஆச்சரியம்: 'ஏன் இது இவ்வளவு கனமாக உள்ளது? அதற்குள் என்னதான் இப்படி கனமாக பொருள் உள்ளது' என்பதை பார்க்க விரும்பி கூடையை சிரமப்பட்டு இறக்கினாள்.

தனது கூடையை இறக்கிப் பார்த்ததும் அவள் கண்டது அவளுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது! ஏன்? கூடைக்குள் பழங்கள் இல்லை! வேறு என்ன இருந்தது? விலை மதிக்க முடியாத மாணிக்கங்களாலும் வைடூரியங்களாலும் அது நிரம்பி ஜொலித்துக் கொண்டிருந்தது! மதுராபுரியை ஆண்டு வந்த கம்ஸனின் முழு கஜானா கூட ஒரு கல்லின் மதிப்புக்கு ஈடாகாது!

ஆனால் அந்தப் பழக்காரிக்கோ இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெரிய பொக்கிஷமல்லவோ கிடைத்துள்ளது! அது என்ன? கிருஷ்ணனிடம் பிரேம பக்தி! அதற்கு இவை எல்லாம் எம்மாத்திரம்! கோடிக் கோடியான பிரம்ம சுகங்கள் அந்த பிரேம பக்தி சாகரத்தில் ஒரு துளிக்குக் கூட இணையாகுமோ?

அவள் இப்போது ஒரு முடிவுக்கு வந்தாள்: "இந்த மாணிக்கங்களும் வைடூரியங்களும் எனக்கு இனி

என்ன உபயோகம்?” அவள் எல்லாவற்றையும் அப்படியே யமுனா நதியினுள் கொட்டினாள்! இரு கைகளையும் கூப்பி தலையின் மேல் துக்கி, பைத்தியம் பிடித்தவள் போல் பாடி ஆட ஆரம்பித்தாள்…

*“கோவிந்த தாமோதர மாதவேத்தி!*
*கோவிந்த தாமோதர மாதவேத்தி!”*

அவள் உடலிருந்த துணிகள் கூட அவளுக்குத் தெரியாமல் கீழே விழுந்தன. கிருஷ்ண பிரேமையினால் மயங்கிக் கீழே விழுந்தாள்! அழுது புரண்டாள்! அவளுக்கு இப்போது கிருஷ்ணனைத் தவிர வேறு எதுவுமே தேவையில்லை. அவள் இதயம் அப்படியே இளகி உருகியது!

அதன் பின் அவள் எங்கு போனாள் என்பது யாருக்குமே தெரியவில்லை. ஏனென்றால் அவள் தன் சொந்த வீட்டுக்குத் திரும்பவேயில்லை எங்கே சென்றிருப்பாள்? யாராவது கூற முடியுமா?

கிருஷ்ணன் அவனது இதயத்தை முழுவதும் அறிவான், “ஓ அவள் எனக்குத் தாயாக வேண்டுமென்றல்லவா விரும்பினாள்!” கிருஷ்ணன் என்ன செய்தான்? அவளுக்கு மிக அழகான ஒரு ஆன்மீக உடலை அளித்து அவளைத் தன் உத்தமமான கோலோக பிருந்தாவனத்தில் என்றென்றும் நிரத்தரமாக தாயாகவே இருக்கப் பேரருள் புரிந்தான்.

அவளது உடலோ யமுனா நதிக்கரையில் அனாதையாகக் கிடந்தது. யாரோ ஒருவன் அதை எடுத்து தீயில் எரித்து அக்கம் செய்தான்.

# முழு இதயத்தால் கனிந்து பாடு

அந்தப் பழக்காரியின் பக்தியை நீங்களும் பின்பற்றினால் அது என்னே பெரிய காரியம்! குருதேவர் உங்களுக்கு அந்தப் பிரேம பக்தியை அல்லவா கொடுக்க வந்துள்ளார்? அவர் உங்களுக்குக் கொடுக்கும் இந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷத்திற்கு உங்களால் இந்த உலகத்தில் உள்ள எதைக் கொடுத்தாலும் ஈடாகுமா? குருதேவருக்கு காணிக்கையாக உங்களால் எதையுமே கொடுக்க இயலாது!

நீங்கள் குருதேவரையும் ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளையும் என்றென்றும் தியானித்து உண்மையை உணர வேண்டும். ஸ்ரீகிருஷ்ணர் அந்தப் பழக்காரிக்கு அளித்த அதே பிரேம பக்தியைத் தான் உங்களுக்கும் குருதேவரும் கொடுக்க விரும்புகிறார். எனவே நீங்கள் உங்கள் வாழ் நாட்களையும், விலை மதிக்க முடியாத காலத்தையும் வீணாக்காமல், அவரிடமிருந்து அதை உடனே பெற்றுக் கொள்ளுங்கள். இப்போதே இந்தக் கணத்திலிருந்து நீங்கள் கிருஷ்ண பிரேமையைப் பெற்று இப்படி பாடவேண்டும்'!

“கோவிந்த தாமோதர மாதவேத்தி!
கோவிந்த தாமோதர மாதவேத்தி!”

ஆனால் இதை நீங்கள் எவ்விதமாகப் பாடவேண்டும்? இதை சாதாரண பாடல் போல் பாடக்கூடாது. உங்கள் இதயத்தால் கனிந்து ஸ்ரீகிருஷ்ணரைப் பாட வேண்டும். இல்லாவிடட்டால் அது அவன் காதில் விழாது. ஆனால் நீங்கள் தேர்ச்சி பெற்ற பாடகர்கள் போல் இனிமையான பல வாத்தியங்களுடன் பாடினால் கிருஷ்ணன் ஒரு போதும் கேட்கவே மாட்டான்! அவனுக்கு உங்கள்

இனிய குரலோ நாதமோ, இராகமோ தேவையேயில்லை! அவனுக்கு அவையெல்லாம் நன்றாகவே தெரியும். அவன் அறியாத பாடல்கள் எதுவும் இல்லை. பின்னர் உங்களிடமிருந்து அவனுக்கு என்ன வேண்டும்? அவனுக்கு வேண்டியது ஒன்றே ஒன்று. உன் கனிந்த இதயம்! தேர்ச்சியுடனும் வாத்தியங்களுடன் பாடும் பக்தன் ஒரு கீழ் நிலையில் உள்ள பக்தனேயாகும். கிருஷ்ணன் விரும்புவது அதற்கும் மேலானது.

நீ உன் உள் இதயத்திலிருந்து முழுவதுமாக கிருஷ்ணனை நினைத்து கனிந்து பாட வேண்டும். நாம உச்சரிப்போ அல்லது கீர்த்தனையோ எது பண்ணினாலும் உன் மனத்தை முழுவதுமாகச் செலுத்தி கிருஷ்ணன் மேல் ஆழ்ந்து பாட வேண்டும். அப்போது மட்டுமே அவன் அதைக் கேட்பான். உடனே வருவான்! வந்து அவனது விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களை உனக்குக் கண்டிப்பாகத் தருவான்!

கௌர பிரேமானந்தே!
ஹரே கிருஷ்ணா!